# 30-ந் திகதிவரை வரி செலுத்த யாழ். நகரமக்களுக்கு அவகாசம்

Riegstered as a News pape in Ceylon விலைசதம் 15 ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
மலர் 11
இதழ்: 69

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம்) சித்திரை 9 ஸபர் 3 திங்கட்கிழமை 21-4-69]

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் நகர வரியிறுப்பாளர்கள் தமது முதலாம் கந்தாயத்துக்குரிய வரிப்பணத்தைச் செலுத்துவதற்கு இம்மாதம் 30-ந் திகதி வரை அவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதாக நகரமேயர் திரு. சி. நாகராசா தெரிவித்துள்ளார். வரிசெலுத்துவதற்கான இறுதி நாள் 30 ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்றும் இதற்குப் பிந்தாமல் வரியிறுப்பாளர் தமது வரியைச் செலுத்தி விடவேண்டுமென்றும் அவர் சொன்னார்.

இதேசமயம் வரியிறுப்பாளர் ஒவ்வொருவரும் வரி மதிப்புஅறிவித்தல்கிடைத்த 30 நாட்களுக்குள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துவிடவேண்டும் என்றும் முப்பதுநாட்களுக்குப் பின்னர் கிடைக்கும் ஆட்சேபனைகள் பரிசீலனைசெய்யப்பட மாட்டாவென்றும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென்றும் மேயர் தெரிவித்தார்.

## ஏழு பிள்ளைகளின் தந்தை மண்வெட்டியால்அடித்து கொலை

இமையாணன், சனி தோட்டம் சம்பந்தமாக எழுந்த தகராறில் ஏழு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று இன்று மாலை வல்வெட்டித்துறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கம்பர்மலையில் நிகழ்ந்துள்ளது.

கதிரன் தம்பர் (வயது 53 என்பவரே இவ்விதம் கொலை செய்யப்பட்டவராவார்.

இதுசம்பந்தமாக மாணிக்கம் செல்லத்துரை என்பர் சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறந்தவரின் தலை, கை, வயிறு முதலிய இடங்களிலும் காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தோட்டத்திலிருந்த இரண்டு மண்வெட்டிகளை பரிசோதனைக்காக பொலிசார் எடுத்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# தமிழ்மக்களை நசுக்குவதுநம் நோக்கமல்ல; நாம்நண்பர்கள்

## யாழ். நகர்வந்த கூட்டணி எம்பிக்கள் கூறிய உறுதி

## ‘தமிழரின்கஷ்டங்களை அறிந்து நீக்குவோம்’



### தேசிய சுவீப முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு நேற்று கொழும்பு லொத்தர்சபை மண்டபத்தில் இழுக்கப்பட்ட 242-வது தேசிய லொத்தர் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதற் பரிசு
14 M 0786 ரூ. 75,720
இரண்டாம் பரிசு
13 A 0594 ரூ 30,288
மூன்றும் பரிசு
02 D 0882 ரூ, 7,572

தலா ரூபா 378-60 சதம் பெறும்100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

யாழ்ப்பாணம், திங்கள் ‘‘எட்டு ஆண்டுகளாக நான் பருத்தித்துறையில் கல்வி கற்றபோதே தமிழ் மக்களுடன் நெருங்கிப் பழகியவன். இதனல் தமிழ் மக்களின் தேவைகளையும் அவர்களின் உரிமைகளையும் அவர்களது அபிலாஷைகளையும் நான் நன்குணர்ந்தவன். இதனல் இந்த நாட்டில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே சகோதரத்துவம், சமாதானம், சமத்துவம் என்பன ஏற்பட்டு ஒன்றுபட்ட வாழ்க்கைக்கு அத்திபாரம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நான் இங்கு வந்துள்ளேன்.’’

அறிந்து, அவைகளை நீக்க முயற்சி எடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றும் சிங்கள மக்கள்பற்றித் தமிழ்மக்களிடையே உள்ள அவநம்பிக்கையை அறவே அகற்றத் தாம் பாடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினர்.

திரு. ரி. பி. சுபசிங்கா எம். பி. பேசியதாவது;

### இங்கு வந்தது கட்சியை வளர்க்கவல்ல

எமது கட்சியை வளர்க்க அன்றி, எமது கொள்கை தனை உங்களுக்கு விளக்கி தப்பான அபிப்பிராயங்களை நீக்கவே இங்கு வந்துள்

## “ஆட்டுக்கடா வெட்டும்கத்தியால் எதிரி தோளில் வெட்டினர்”

### இளவாலை கொலை வழக்குவிசாரணை

யாழ்ப்பாணம், திங். சம்பவம் நடந்ததினம் எதிரி, நாகனுடன் பேச்சுப் பட்டுக்கொண்டிருந்தார். இறந்தவர் நாகனுக்குக் கிட்டப்போனர். அப்போது எதிரி ‘ஆட்டுக்கடா வெட்டும் கத்தியால் இறந்தவரின் தோளில் வெட்டினர். இறந்தவர் கொஞ்சத்தூரம் ஓடிப்போய் விழுந்தார்.’’

இளவாலை கொலைவழக்கில் சாட்சியமளித்த கந்தன் மாணிக்கம் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில்விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் இளவாலையில் 68-ம் ஆண்டு மேமாதம் 14-ந் தேதி கதிரன் இராமன் என்பவர், சின்னப்பொடியைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் எஸ். ஆனந்தகுமாரசாமி, புறக்டர் சி. ஆறுமுகத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அட்வகேட் சி. ஆறுமுகம் நியமிக்

நல்லையாவும் நானும் இறந்தவரும் வேலை செய்து கொண்டிருந்தோம், காலை 6 மணிக்குத் தோட்டத்திற்குப் போனேம். மாலை 6 மணிக்கு நானும் நல்லையாவும் வேலைமுடிந்து வீட்டிற்குப் புறப்பட்டோம். இறந்தவர் தானும் வாறதாககூறி எங்களுடன் வந்தார். அப்பொழுது வெளிச்சம் இருந்தது. காலடிப் பாதையால் வந்தோம். எதிரி கத்தியோடு நின்ருர். அவர் நாகனுடன் பேச்சுப்பட்டுக் கொண்டிருந்தார். இறந்தவர் நாகன்நின்ற இடத்திற்குப்போனபோது எதிரி ஆட்டுக்கடா வெட்டும் கத்தியால் அவரின் தோளில்வெட்டினர். இறந்தவர் கொஞ்சத்தூரம் போய் விழுந்துவிட்டார். வீட்டு வாசலில் விழுந்தார் நான் எதிரியைத் துரத்திச் சென்று கத்தியைப் பறித்தேன். நல்லையாவும் உதவிசெய்தார். எதிரி ஓடிவிட்டார். இறந்தவருக்கு நல்லையா தண்ணீர் கொடுத்தார். நான் அவரைப் பிடித்துக்கொண்டிருந்தேன். அதன்பின் கிராமசேவகரிடம்

டில் வசிக்கின்றனர்,

எதிரியின் வழக்கறிஞர் சாட்சியமளித்த மாணிக்கத்தை குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: உங்கள் கிராமத்தில் எத்தனைகோவிலகளில ஆட்டுக்கடா வெட்டுகிறது? 3 கோவில்களில்.

வழ, உமது சகோதரன் நாகன் ஆட்டுக்கடா வெட்டுகிறவர்? — அவர் ஆடு வெட்டுகிறதில்லை. அதற்குபொறுப்பாக இருப்பவர்.

வழ: அவரிடம் ஒருகத்தி இருக்கிறது? - இல்லை.

வழ: இந்தக்கத்தி உன் அண்ணன் வைத்திருந்தார்? இலலை

வழ: நீட்டி வைத்திருந்தார்? இலலை.

வழ: அன்று பொன்னிவீட்புல சண்டை பிடித்தார்கள்? இலலை.

வழ: நாகன் மனைவிக்கு அடிக்கடி உருவாகிறது? இலலை.

வழ: அன்று அவர் உருவந்துதான் இந்தக் கத்தியை எடுத்துவந்தார்? இல்லை.

வழ: கத்தியைப் பறிக்கப் பார்த்தீர்கள்? இலலை.

வழ: அப்போது இது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செல்வி வசந்தகுமாரி முத்துக்குமாருவின் அபிநயத்தோற்றங்களில் ஒன்று இது. யாழ்ப்பாணம் ஐயனுர் கோவிலடி விசுவேசப்பிள்ளையார் கோயில் புதிய தேர், தேர்முட்டி ஆகிய திருப்பணிகளுக்கென நிதிதிரட்டுவதற்காக செல்வி வசந்தகுமாரியின் நடனநிகழ்ச்சி இம் மாதம் 23-ம்திகதி மாலை யாழ். நகரமண்டபத்தில் நடைபெறுகிறது. ஐயனுர் கோயிலடி ஜனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெறும் இந் நடன நிகழ்ச்சிக்கு இலங்கை வங்கியின் துணை நிறுவனமான கைத்தொழில் நிதி ஆலோசகர்கள் நிறுவன நெறியாளரான திரு. இராஜசூரியர் செல்லப்பாவும் பாரியாரும் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

# வலை திருடியவர்களுக்கு 6 மாத கடூழியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலைத் திருட்டில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட எதிரிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த எஸ். அல்பேட் என்பவருடைய ரூபா 300 பெறுமதியான நைலோன் வலையை 5-11-67ல் திருடியதாக அதே ஊரைச் சேர்ந்த சந்திலோ ராசேந்திரம், நன்னிச்செல்வம்ஆகியோருக்கெதிராக கரையூர் பொலிசாரினுல் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட எதிரிகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனுப் எம். ஜமீல் தலா ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். வலைத் திருட்டு வழக்கில் எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பளித்த வழக்கு இது ஒன்றுதான் எனக் கருதப்படுகிறது.

இவ்வழக்கில் பொலிஸ் தரப்பில் புறக்டர் ஏ. அன்ரனிஆஜராஞர்.

(ந. நி.)

## பெரியபுராண உபந்நியாசம்

அளவெட்டி, சனி

நவாலியூர் சைவப் பிரசாரகர் திரு வி. நல்லையா புதுவருட தினம் முதல் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் பெரியபுராண உபந்நியாசத்தை தொடர்ந்து நிகழ்த்தி வருகிறுர்.

இவ் விரிவுரை உபந் நியாசத்தை மாவைக்கந்தன் ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் ஆரம்பித்து வைத்தார்,

## மோதிரம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணை சிவன்கோவிலில் வைசவாசார முறைப்படி திருமணம் செய்துகொண்ட சிக்காகோ கெனத் டேவிட் தாம்அணிந்திருந்த மோதிரத்தை திருமண வைபவத்தின்போது தேங்காய் அடிக்கையில் தவறவிட்டிருந்தார். இந்த மோதிரம் நேற்று சில அன்பர்களால் மீட்டுக் கொடுக்கப்பட்டபோது டேவிட் இதற்கு தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

வண்ணை சிவன்கோவிலில் கென்னத் டேவிட்-கரோல் ஆகியோரது திருமணத்தை நடத்தி வைத்தவர் எஸ். கைலாசநாதக் குருக்கள், (பாப்பா ஐயர்)

| | |
|---|---|
| 14 M 0786 | ரூ. 75,720 |
| இரண்டாம் பரிசு | |
| 13 A 0594 | ரூ 30,288 |
| மூன்றும் பரிசு | |
| 02 D 0882 | ரூ, 7,572 |

தலா ரூபா 378-60 சதம் பெறும்100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 02 A 0501 | 32 A 0020 |
| 39 A 0990 | 32 B 0164 |
| 37 B 0415 | 15 B 0298 |
| 01 B 0476 | 22 B 0253 |
| 35 B 0687 | 08 C 0727 |
| 24 C 0602 | 31 C 0028 |
| 25 C 0221 | 27 D 0713 |
| 08 D 0420 | 22 D 0559 |
| 04 D 0145 | 34 E 0054 |
| 21 E 0563 | 38 E 0435 |
| 01 E 0607 | 04 F 0910 |
| 21 F 0542 | 38 F 0990 |
| 30 G 0023 | 23 G 0721 |
| 03 H 0923 | 16 H 0733 |
| 18 H 0643 | 15 H 0367 |
| 21 H 0779 | 08 H 0018 |
| 15 J 0028 | 36 J 0905 |
| 09 J 0465 | 04 J 0119 |
| 06 J 0201 | 38 J 0285 |
| 22 J 0929 | 11 J 0041 |
| 10 K 0075 | 30 K 0453 |
| 20 K 0450 | 11 K 0068 |
| 34 L 0586 | 22 L 0245 |
| 20 L 0204 | 32 L 0699 |
| 10 L 0197 | 33 L 0171 |
| 16 M 0477 | 12 M 0665 |
| 03 M 0906 | 09 M 0097 |
| 16 M 0605 | 09 N 0495 |
| 26 N 0437 | 10 O 0475 |
| 39 O 0161 | 32 P 0604 |
| 23 P 0025 | 39 P 0111 |
| 28 P 0876 | 27 P 0658 |
| 40 Q 0126 | 28 Q 0400 |
| 02 R 0421 | |
| 06 Q 0601 | 10 R 0171 |
| 14 R 0163 | 10 S 0604 |
| 26 S 0357 | 11 S 0879 |
| 02 S 0645 | 18 T 0400 |
| 19 T 0309 | 20 T 0546 |
| 27 T 0938 | 07 T 0924 |
| 34 U 0858 | 26 U 0298 |
| 08 U 0049 | 30 V 0931 |
| 22 V 0287 | 14 V 0668 |
| 18 V 0826 | 06 V 1128 |
| 20 V 1470 | 40 V 0384 |
| 02 V 0921 | 02 W 0602 |
| 38 X 0306 | 27 X 0636 |
| 21 Y 0629 | |
| 36 Y 0908 | 37 Z 0493 |
| 10 Z 0980 | 11 Z 0016 |
| 31 Z 0962 | 09 Z 0660 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

களவர்களுக் கு மிடையே சகோதரத்துவம், சமாதானம், சமத்துவம் என்பன ஏற்பட்டு ஒன்றுபட்ட வாழ்க்கைக்கு அத்திவாரம் அமைக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே நான் இங்கு வந்துள்ளேன்.''

நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் பலத்த கரகோஷத்துக்கிடையே இவ்வாறு தனித்தமிழில் அனுராதபுரம் எம். பி. திரு. இரத்நாயக்கா பேசினுர்.

எதிர்க்கட்சிக் கூட்டணியின் யாழ்ப்பாணக் கிளையின் அழைப்பை ஏற்று வடக்கே வந்திருந்த திருவாளர்கள் இரத்நாயக்கா எம். பி., ரி. பி. சுபசிங்கா எம். பி. ஆகியோர் நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணம் நாகவிகாரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டனர். நாகவிகாரை பிரதம குரு. வண. நந்தா ராமநாயக்க தேரோ தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு இரத்நாயக்கா எம். பி. மேலும் பேசியதாவது:

ஸ்ரீமாவோ தான் நாட்டின் அடுத்த பிரதமர் என நான் முதலிலேயே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் இந்த நாட்டில் இன, மத சாதிப் பாகுபாடு இருக்கக் கூடாது என்பதே எனது கொள்கையாகும். தமிழ்மக்கள் மத்தியில் நீண்டகாலம் நான் வாழ்ந்தவனுகையால் அவர்களது கஷ்டங்களை நான் நன்கு அறிந்திருக்கின்றேன்.

தமிழ் மக்களது கஷ்டங்களை நீக்க அவர்கள் மத்தியில் சென்று அவர்கள் தேவைகளை அறியவேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக நான் ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சிக்கு தெரிவித்திருக்கின்றேன். இன்று வந்திருப்பதே அதனுல் தான்.

எமது கட்சியை வளர்க்கும்முகமாகக் கிளைகளை அமைக்க வேண்டுமென்பதல்ல எமது நோக்கம். தொகுதி தோறும் கிளைகள் நிறுவி உங்கள் கஷ்டங்களை

### கட்சியை வளர்க்கவல்ல

எமது கட்சியை வளர்க்க அன்றி, எமது கொள்கைகளை உங்களுக்கு விளக்கி தப்பான அபிப்பிராயங்களை நீககவே இங்கு வந்துள்ளோம். தமிழ் மககளை ஒதுக்குவதோ, நசுக்குவதோ எமது நோக்கமல்ல. உலகின் மற்ற நாடுகளில் பெரும்பான்மை இனங்கள் சிறுபான்மை இனங்களை ஒதுக்கி அவர்களது கலை, கலாச்சாரத்தைப் புறக்கணித்து வருகின்றன. இந்த நிலை இலங்கையிலும் ஏற்படக்கூடாதென்றே நாம் விரும்புகின்றேம்.

திரு. வி. பொன்னம்பலம் எம். ஏ, பேசுகையில், திருவாளர்கள் இரத்நாயக்கா, சுபசிங்கா ஆகிய இருவரதும் யாழ்ப்பாண விஜயம் இருநன்மைகளைப்பயக்கும் என்றும் ஒன்று தமிழ் மக்கள் கூட்டு முன்னணியின் கொள்கைகளை அறிந்துகொள்வது மற்றது கூட்டுமுன்னணியினா தமிழ் மக்களது தேவைகளை நேரில் அறிந்து அவைகளை நிறைவேற்ற முயற்சி எடுப்பதும் என்ருர்.

### சந்தித்துப் பேசினர்

அரியாலை முஸ்லிம் பகுதி சுழிபுரம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்த இரு எம். பி.க்களையும் கொண்ட கோஷ்டி, தமதுஆதரவாளர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திஞர்கள்.

நாகவிகாரையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் இராஜகுலசிங்கம், டேவிட், முத்தையா, முன்ளுள் செனட்டர் ஜி. நல்லையா ஆகியோரும் பேசிஞர்கள். திரு. எஸ். தேவதாசன் நன்றி தெரிவித்துப் பேசிஞர்.

இரு எம். பி.க்களும் நேற்று முன்தினம் இரவே திரும்பிச் சென்ருர்கள்.

(கா. நி.)

தாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் எஸ். ஆனந்தகுமாரசாமி, புறக்டர் சி. ஆறுமுகத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிர்க்காக அட்வகேட் சி. ஆறுமுகம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜராஞர்.

கந்தன் மாணிக்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரியை 5 வருடமாக தெரியும். இறந்தவரையும் தெரியும். சம்பவம் நடந்த தினம் காலை தோட்டத்தில் தியைப் பறித்தேன். நல்லையாவும் உதவிசெய்தார். எதிரி ஓடிவிட்டார். இறந்தவருக்கு நல்லையா தண்ணீர் கொடுத்தார். நான் அவரைப் பிடித்துக்கொண்டிருந்தேன். அதன்பின் கிராமசேவகரிடம் போனேன். அவரிடம் முறைப்பாடு கொடுத்தேன். அவர் இறந்துவிட்டதால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவில்லை, அதன்பின் பொலிசுக்குப் போனேம். நல்லையா பொலிசுக்கு வரவிலலை. எதிரியின் மூத்த சகோதரர் ஆடு வெட்டுறவர். இருவரும் ஒரே வீட்

இலலை.

வழ: அன்று அவர் உருவந்துதான் இந்தக் கத்தியை எடுத்துவந்தார்? இலலை.

வழ: கத்தியைப் பறிக்கப் பார்த்தீர்கள்? இலலை.

வழ: அப்போது இது நடந்தது? இலலை.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

சைவமாநாட்டுத் தலைவர்

# சோமசுந்தரம் செட்டியார் இன்று யாழ். வருகிறுர்



யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைச் சைவ மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கவிருக்கும் சென்னை சித்தாந்த வித்தகர் திரு. சோமசுந்தரம் செட்டியார் இன்று காலை 11-20 மணிக்கு விமானத்தில் யாழ்ப்பாணம் வருகின்ருர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் சைவமகாநாடு இம்மாதம்23-ம், 24-ம் 25-ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் தொடர்ந்துநடைபெறவிருக்கின்றது.

இன்று காலை பலாலி விமான நிலயத்தில் வந்திறங்கும் திரு. சோமசுந்தரம் செட்டியாரை முதலியார் செ. முத்துத்தம்பி, ஆ. தனபாலசிங்கம், மு. மயில்வாகனம், க. கணபதிப்பிள்ளை, கா. கி. நடராஜன் உட்படப் பல்வேறு சமயப் பெரியார்களும் சென்று வரவேற்பார்கள். (கா. நி.)

# 'அண்ணுதுரைவீதி' யென பெயர் சூட்டக்கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள்ளிருக்கும் ஒரு வீதிக்கு அண்ணுதுரை வீதி என பெயர் சூட்டுவது பற்றி, வீதிகளுக்கும் ஒழுங்கைகளுக்கும், பெயர் சூட்டும், குழு ஆலோசித்துவருகிறது.

வீதிகளுககும், ஒழுங்கைகளுக்கும், பெயர் சூட்டும் குழுவுக்கு உதவி மேயர் திரு ஏ. துரைராசசிங்கம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறுர். இக்குழுவில் திரு. ஏ, போல்ராஜா, திரு. எஸ், சிவசுப்பிரமணியம், திரு. ஏ. நடராசா, திரு. கே. எஸ். நடராசா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்துமகளிர் கைஒழுங்கைக்கு 'அண்ணுதுரை வீதி யெனப் பெயர் சூட்டும்படி வரியிறுப்பாளர் இக்குழுவிடம் கோரியுள்ளனர். நவரத்தினசாமிவீதி, கந்தையா வைத்தியர் வீதி, விபுலானந்தர் வீதி, சாமிநாதையர் வீதி, பேரறிஞர் வீதி என்றும், சில வீதிகளுக்கு பெயர் சூட்டும்படியும், இககுழுவிடம் கோரப்பட்டுள்ளது.

இந்த ஒரு தனிப்பட்ட சாதியை குறிப்பிடும் பெயர்கள் வீதிகளுக்கு சூட்டப்பட்டிருந்தால், பொதுமக்களின் விருப்பத்தின்படி அப்பெயர் மாற்றியமைககப்படும் என்று குழுத்தலைவர் திரு. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மாநகரசபை எலலைககுள்ளிருககும் வீதிகளுக்கும், ஒழுங்கைகளுக்கும், ஏற்ற பெயர்களை வரியிறுப்பாளர்கள் தெரிவித்தால அப்பெயர்களை சூட்டுவதுபற்றி ஆலோசிப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

## திருக்கேதீச்சர திருவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் திருக்கேதீச்சரத் திருவிழாவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்வர். பரீட்சை காரணமாக கல்லூரி மீண்டும் திறப்பது அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு பின்போடப்பட்டிருந்தாலும் இவ் விழாவிற்குச் செல்வதிலோ உபயகாரராகக் கலந்து கொள்வதிலோ எவ்வித மாற்றமும் இல்லை எனவும் மாணவர்கள் இது விடயமாக திரு. க. சிவராமலிங்கத்தை கல்லூரியிலேயே 22-ம் தேதிக்கு முன்பு கலந்து கொள்ளவேண்டுமெனவும் கல்லூரியதிபர் தெரிவித்தார்,

## பஸ் பிரயாணிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதி பஸ் பிரயாணிகளுக்கு பழைய பஸ்களினுல் ஏற்படும் கஷ்டங்களை சுட்டிக் காட்டி புதிய பஸ்களை அனுப்புமாறு ஊர்காவற்றுறை பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. தலைவர், பொது முகாமையாளர் ஆகியோரைக் கேட்டிருக்கிறது.

பழைய பஸ்கள் பழுதுபட்டோ, வராமலே நின்றுவிடுவதால் பாடசாலை மாணவர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் ஏற்படும் மிகுந்த சிரமங்களை நீக்குவதாக கடந்த ஒன்றரை வருடங்களாகக் கூறப்பட்டு வந்தபோதிலும் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே பழைய பஸ்களை நீக்கிவிட்டு புதிய பஸ்களை அனுப்புமாறு பஸ் பிரயாணிகள் சங்கத்தின் தலைவர் திரு. பி. ஜே. அலோஷியஸ், உபதலைவர் திரு. எம். குமாரசாமி ஆகியோர் இ. போ. ச. தலைவர், முகாமையாளர் ஆகியோருக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளனர். இதன் பிரதிகள் தேசியமய அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாசா செனட்டர் திரு. நீதிராஜா ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

# மேற்கு ஆசிய எல்லையை போர் தாண்டிவிடும்

## ஜோர்டான்மன்னர் விடுக்கும்எச்சரிக்கை

வாஷிங்டன் ஏப். 19

அரபு இஸ்ரேல் போர் நிறுத்தப்படாவிட்டால் இப்போர் மேற்காசியாவின்எல்லையைக் கடந்தும் விஸ்தரித்து விடும் அபாய நிலை ஏற்படும்என்று ஜோர்டான் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையே நேற்று சுயஸ்கால்வாய் பகுதியில் ஐ அ, குடியரசு படைகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்குமிடையே இரண்டரைமணி நேர சண்டை நடைபெற்றதாகவும் இதில் இஸ்ரேலிய படையினருக்கு அதிக சேதம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது,

மன்னர் குசேன் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

வில்லியேர்ஸ் மாக் 12 தண்ணீர்பம் பிஸ்டன், றிபோறிங்செய்பவர்களுக்கு ரூபா 50/-க்கு கொடுக்கப்படும். ராமகிருஷ்ணு ஸ், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 947

### கல்வி

காலை/மாலை/போயா வகுப்புகளுக்கு: ஜீ. சீ. ஈ. சாதாரணம், கலை/விஞ்ஞான/வர்த்தகம் / மனையியல் உயர்தரம்கலை / விஞ்ஞானம்/ வர்த்தகம், ஜீ. ஏ. கியூ, சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தகசணிதம், வர்த்தக புவியியல் பொருளாதாரம், விசேஷ ஆங்கிலம், சிங்களம் - வகுப்புகளுக்கு பிரவேசங்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மகளிருக்கு விசேட வகுப்புகளும் விடுதி வசதியும் உண்டு. யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 953

ஜீ. சீ. ஈ. சாதாரண / உயர்தர, கலை, விஞ்ஞானம், வர்த்தகம் பயிலும் மாணவர்களுக்கு இல்லங்களில் / நிறுவனத்தில் தகைமையும், அனுபவமும் உள்ள ஆசிரியர்களால் டியூஷன் கொடுக்கப்படும். விசேட சித்திக்கு உத்தரவாதம் யுனைடெட் இன்ஸ்டிடியூட், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 952

### EDUCATION

The Jaffna Education centre G. C. E. O. L. and A. L. Science and Arts Classes and Organic practicals will start on 28-4-69. 304/3, Hospital Road, Jaffna. 948

### தேவை

பாவித்த பழைய கல்லுரல்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். தம்பிராசா வைத்தியசாலை, நெல்லியடி, கரவெட்டி. 950

### கல்வி

தட்டெழுத்து / பிரதிபண்ணல் வேலைகள் நியாயமான கட்டணத்தில் விரைவில் செய்துதரப்படும். யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 951

யாழ்ப்பாணத்தில் முதலாவதாக மகளிருக்கு மாத்திரம் அனுபவமுள்ள பெண் பட்டதாரிகளால் ஆக்கப்பட்டது. விசேஷ சித்திகளுக்கு உத்தரவாதம். காலை, மாலை, போயா வகுப்புகள்- ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை/ விஞ்ஞானம் / வர்த்தகம் / மனையியல், உயர்தரம் கலை/ விஞ்ஞானம் / வர்த்தகம், ஜி. ஏ. கியூ, சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம் விசேட ஆங்கிலம், சிங்களம். விடுதி வசதியுண்டு. தாமதமின்றி சேரவும், யுனைடெட் மகளிர் கல்லூரி, 107பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 954


## கி. மு. சங்க ஆண்டுவிழா

பூநகரி, ஞாயிறு

பூநகரி வேரவில் கி. மு. சங்க 10-வது ஆண்டுவிழா பூநகரி காரியாதிகாரி எம். இராசரத்தினம் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பல போட்டிகள் இடம்பெற்றன. போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு காரியாதிகாரி பரிசில்கள் வழங்கினர். இறுதி நிகழ்ச்சியாக நாடகமும் மேடையேற்றப்பட்டது.


ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
ஜீவனம்சம்

இங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன், (யாழ். நகர்)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ண


## மயிலிட்டிக் கிராமசபையினுல் வெளியிடப்பட்டகேள்வி விளம்பரத் திருத்தம்

சென்ற 15-4-69-ம், 16-4-69-ம் திகதிகளில் ஈழநாடு பத்திரிகையின் இக்கிராமசபையின் ஆழ்விழுந்தான் ஒழுங்கைத் திருத்தத்திற்கும், தேவசுகிரி ஒழுங்கைத் திருத்த வேலைகளுக்கும் வெளியிடப்பட்ட கேள்வி விளம்பரத்தில், கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 30-4-69 காலை 9-30 மணி என்பதற்குப் பதிலாக 3-5-69 காலை 9-30 மணியென இத்தால் மாற்றப்பட்டிருக்கிறது.

க. மகாதேவன்
தலைவர்
கிராமசபை மயிலிட்டி.
1527

### காணிக்கச்சேரி அறிவித்தல்

என் 4515பளைபெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் ஆனையிறவு வடமேற்கு, இயக்கச்சியில் ஏறத்தாழ 2000 ஏக்கர் காணி தென்னைச் செய்கைக்கென 25ஏக்கர் துண்டுகளாகவழங்குவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஒரு காணிக்கச்சேரி நடாத்தப்படும்.

விண்ணப்பங்கள் 20-5-69 க்கு முன்பு அனுப்பப்பட வேண்டும். வேறுவிபரங்களுக்கு 14851 இலக்கங்கொண்ட 25-4-69ந் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். அரசாங்கஅதிபர். GP 2865


ராஜா (யாழ்ப்பாணம்) 98வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
எஸ் எஸ் ஆர். - கமலா
நடித்த
சிவகங்கைச்சீமை

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம்

### திங்கள் 21—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45துதிப்பாடல்கள், 7-10 உள்ளூர்ச் செய்திகள் 7-15 வாத்திய இசை, 7-30 படப்பாட்டுக்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ. அன் 49 மீ.**

12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை,

**344 மீ. அன் 61 மீ.**

4-30கல்விஒலிபரப்பு 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படப்பாட்டுக்கள்.

6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 பாட்டு, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 9-40கதாப்பிரசங்கம் 10-30 செய்திச்சுருக்கம்.

## இன்றைய பலன்

21-4-69

சௌமிய வருடம்
சித்திரை மீ 9-ம் உ
திங்கட்கிழமை

திதி. பஞ்சமி.
நட்சத்திரம் - மிருகசீரிடம், இரவு 3-08 மேல் திருவாதிரை.
ராகுகாலம்-7-31- 9-01
சுபநேரம்- 12-01-1-31

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு மேடு-பள்ளங்கள் நிறைந்ததேயாகவிருக்கும். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்த்துக்கொள்ளவும். உடல் நலம் பாதிக்கப்படலாம். நல்ல செய்தியொன்று... ஆதரவைத் தரலாம். பெண்கள் தங்கள் வாழ்க்...

நாவலர், இராமநாதர், மளவராயர்

# சொத்துக்களை உபயோகித்து இந்துப் பல்கலைக்கழகம் நிறுவவேண்டும்

## சைவபரிபாலன சபைசெயலாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் பெருமானதும், இராமநாத வள்ளலதும், மளவராயரதும் தருமச்சொத்துக்களைப் பாவித்து சைவ சமய சாத்திரங்களைக் கற்பதற்குத் தனியாக ஓர் இந்துப்பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்'.

இம்மாதம் 23ந்திகதி ஆரம்பமாகவிருக்குப் அகிலஇலங்கைச் சைவமகாநாட்டை முன்னிட்டு சைவபரிபாலன சபையின் செயலாளரான திரு. ஆ. தனபாலசிங்கம் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமைக்கப்படும் பல்கலைக்கழகத்தில் மற்றைய சமய மாணவர்களையும் சேர்த்து கல்விபயில இடமளிப்பதோடு, சிதம்பரம், காசி ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் போல அது தொண்டாற்ற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சைவபரிபாலனசபை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய மாணவர்களால் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டபோதிலும் அச்சபை இலங்கை முழுவதிலுமுள்ள மக்களின் நன்மையைப் பாதுகாத்து வருகின்றது. இதனுல் மற்றைய சமயத்தவர்களிடம் எமக்கு எந்தப் பாகுபாடும் இல்லை. நாவலர் பெருமானுடைய கொள்கைகளை விசாலமாகவும், நேர்மையாகவும் இச்சபைபிரசாரம்செய்து வருகின்றது. (கா. நி.

# சாகித்திய மண்டல அரபுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

ஸ்ரீலாகா சாகித்திய மண்டல இஸ்லாமிய அரபு இலக்கியக் குழு 1969-ம் வருடம் நடாத்திய அரபுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம்:-

அரபுக் கட்டுரைப் போட்டி (21 வயதுக்குட்பட்டோர்) முதலாம் பரிசு: மௌலவியா பரீதா சுல்பிகார் ஜீனட் (கல் எலியா முஸ்லீம் மகளிர் அரபுக் கல்லூரி) இரண்டாம் பரிசு;- மௌலவியா செரின் மலீஉஹா அப்துல் ரசீம் (கல் எலிய முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி) 3-ம் பரிசு:- மௌலவியா அல்மா அகமட் (கல் எலியா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி)

21 வயதுக்கு மேற்பட்டோர் முதலாம் பரிசு: ஏ. எல். எம். இப்ராஹிம் (பரணகம உயன்வத்தை) இரண்டாம் பரிசு: எம். எச். எம். தௌபிக், (ஹெம்பாதகம) மூன்றும் பரிசு: கன்சுல் ஆரிபா ஸறூன், (கல் எலியா).

அரபுப் பேச்சுப்போட்டி;- முதலாம் பரிசு:- பரிதா சுல்பிகார் ஜீனட் (கல் எலியா) இரண்டாம் பரிசு:- சித்தி றஜிபா பசீர், )கல் எலியா) மூன்றும் பரிசு:- எச். எல். எம். ஹனிப்பா, சிறந்த வுருது கல்எலியா முஸ்லி மகளிர் அரபுக்கல்லூரிக்கு வழங்கப் பட்டுள்ளது. பரிசளிப்பு இம்மாதம் 23-ந் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் நடைபெறும்.

......

## நீர்வேலி கந்தசுவாமி கோயில்

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலில் வருடாந்த உற்சவம் சௌமிய வருடப்பிறப்பன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்று வருகிறது.

அடியார்களின்வசதிக்காக விசேஷ பஸ்சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறதாம். தினமும் இரவு 9 மணிமுதல் 11 மணிவரை 'அளவையூர் சஞ்சீவி' வினுசித்தம்பி திருவிளையாடற் புராணம்பற்றி கதாப்பிரசங்கம் செய்துவருகிறுர். இம்மாதம் 22-ந் திகதி செவ்...

## வெந்நீர் ஊற்றுக்கள்

திருக்கோணமலை, ஞாயிறு

ஜப்பானில்உள்ள வெந்நீர் ஊற்றுக்கள் ஆராய்ச்சி கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை மஷிக்கோவை இலங்கைக்கு வரவழைத்து தீவில் உள்ள வெந்நீர் ஊற்றுக்களைப் பரிசிலனை செய்து அவற்றின் முக்கியத்துவத்தைப் பிரபல்யப் படுத்தி உல்லாசப் பிரயாணிகளின் கருத்தைக் கவர்ந்து, தீர்க்க முடியாத நெடுங்கால நோய்களைக் குணப்படுத்த வழிவகைகளை செய்வதற்கு தேசிய அரசாங்கத்தின் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முயற்சிகள் எடுத்துவருதாகத் தெரியவருகிறது.

திருக்கோணமலைப் பட்டினத்திலிருந்து யாழ்ப்பாணம் அனுராதபுரம் வீதிவழியாக 5 மைல்களுக்கப்பால் உள்ள கன்னியாய் என்னும் சிறு கிராமத்திலே 7 வெந்நீர் ஊற்றுக்கள் அமைந்திருக்கின்றன. இவை சரித்திரப் பிரசித்தம் பெற்ற ஊற்றுக்கள் ஆகும் இந்த வெந்நீர் ஊற்றுக்களுக்கும் திருக்கோணஸ்வரர் ஆலயத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சைவர்கள் கருதுகின்றனர். மிகத் தொன்மைவாய்ந்த இந்த ஏழு வெந்நீர்ஊற்றுக்கிணறுகளையும் இன்றுவரை பாதுகாத்து வருகின்றனர். வெவ்வேறு பாகையில் உஷ்ணத்தைக் கொண்டுள்ள இந்த ஊற்றுக்கள், ஊருக்குவரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு உல்லாசவிருந்தளித்து வருகின்றது அண்மையில் ஜப்பானிய தேசத்து நிபுணர்கள் இந்த வெந்நீர் ஊற்றுக்கள் தீர்க்கமுடியாத நெடுநாள் நோய்களைக் குணப்படுத்த வல்லனஎன்று கண்டுபிடித்ததைத் தொடர்ந்து எங்கள் அரசாங்கமும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

## கத்திக் குத்து

யாழ்ப்பாணம்: திங்

புகையிலை காயப்போடுவதில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து 42 வயது நபர் ஒருவர் கத்தியால் படுமோசமாகக் குத்தப்பட்டாராம்

வேலணைப் பகுதியில்நடைபெற்ற இச்சம்பவத்தில்

## வரவேற்கவில்லை

யாழ்ப்பாணம். திங்கள்

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயம் ஆசாரசீலராகவரும் எவரும் எவ்வித தடையுமின்றி உட்சென்று தரிசிப்பதற்குத் திறந்துவிடப்பட்டதுபற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் ஆலயப் பிரவேசம் செய்தவர்களை ஆலயப்பிரதமகுருக்கள் வரவேற்றதாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது சரியல்ல என்றும் ஆலயத்திற்குவரும்அடியார்களை வரவேற்கவேண்டிய அவசியமில்லை என்பதுடன் அன்று கொடியேற்ற வேலைகளில் எல்லோரும் ஈடுபட்டிருந்த பொழுது குருக்கள் யாரையும் வரவேற்கும் நிலையிலிருக்கவில்லையென்றும் திரு. வி. சரவணமுத்து தெரிவிக்கிறுர்.

## இளைஞர் கொலை

திருக்கோணமலை, ஞாயிறு

திருக்கோணமலை 10-வது டிவிஷனைச் சேர்ந்த 24 வயதுடைய அழகநாதன் சோதிலிங்கம் என்னும் இளைஞர் 3 மாதத்துக்கு முன்பாகத் தான் மணமாகிக் குடித்தனத்தை ஆரம்பித்திருந்தார். நேற்றுமுன்தினம் மாலை இவருக்கும் இவரது ஒன்றுவிட்ட சகோதரர்சபாபதி ஆனந்தராஜா என்பவருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம் ஒன்று கைகலப்பில் இறங்கி ஈற்றிலே சோதிலிங்கத்தின்உயிரையே மாய்த்துவிட்டது. கத்தியினுல் குத்தப்பட்ட சோதிலிங்கம் உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் கூட இவரின் உயிரைக் காப்பாற்றமுடியவில்லை. இந்தப் படுகொலை பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸி. பி. ஜயசூரியா தலைமையில் பொலிஸார் புலன்விசாரணை செய்கின்றனர். கொலை செய்தவரெனக் கருதப்படும் சபாபதி ஆனந்தராஜா இன்னும் தலைமறைவாகவே இருக்கின்றுர்.

## மோசமான நிலையில் இறங்கு துறைகள்

திருக்கோணமலை, ஞாயிறு

மூதூரின் புதிய இறங்குதுறையும் பழைய இறங்குதுறையும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றேனும் நல்லமுறையில் திருத்தியமைக்கப்படவில்லையென

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இங்ஸ்லி
(கொழும்பு)


பிளாசா
(வெள்ளவத்தை)

வெலிங்டன்,
(யாழ். நகர்)

விஜயா
(மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணு
(திருமலை

மற்றும் சினிமாஸ் திரைகளில்


கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்
ஆடலழகி ஜெயலலிதா
எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிந்த
சரவணபிலிம்ஸ்

# சந்திரோதயம்

டைரக்ஷன்: கே. சங்கர்

மைலன்
(கொழும்பு)
எம் கே ராதா — ஜி வரலக்ஷ்மி
நடித்த
பாசவலை



சிவகங்கைச்சீமை

வின் ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
ஆயிரத்தில்
ஒருவன்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பூரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - சாவித்திரி
நடித்த
மிஸ்ஸியம்மா

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p.m.
Glenn Ford, Arthur Kennedy
in
Day of the
EVIL GUN
(Adults)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-Poya 10-30 A.M.
John Wyne
in
ELDORADO


நத தேயா கவிருக்கும். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்த்துக்கொள்ளவும். உடல் நலம் பாதிக்கப் படலாம், தூரத்துச் செய்தியொன்று சிறிது ஆதரவைத் தரலாம். பெண்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும். குடும்ப விவகாரம் சுமாராகவே இருக்கும்.

மேஷம்- புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்,

ரிஷபம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.

மிதுனம்- மக்கள் பிணி, மனப் போராட்டம்.

கடகம்-குடும்ப நலன் குதூகல மிகுதி.

சிம்மம்- சிந்தனைமிகுதி, சகோதர சஞ்சலம்.

கன்னி- மாதுருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்.

துலாம்- பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.

விருச்சிகம்- அரசபயம், ஆயுத பீடை

தனுசு- தென்றல்வீசும், தேன் சொட்டும் வாழ்வு.

மகரம்- தொழிலில் தொல்லை, துன்பம் தொடரும்.

கும்பம்-குருவிசுவாசம், குறிக்கோள் வெற்றி.

மீனம்- செய்தொழில் சிறப்பு, தெய்வத்தின் துணை.

சோதிடக் கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

அரபுப் பேச்சுப்போட்டி:- முதலாம் பரிசு:- பரிதா சுல்பிகார் ஜீனைட் (கல் எலிடா) இரண்டாம் பரிசு:- சித்தி றஜீபா பசீர், )கல் எலியா) மூன்றும் பரிசு:- எச். எல். எம். ஹனிப்பா, (காலி பி. ஜீ. அரபுக் கல்லூரி).

## சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் தெற்கு சன்சமூக நிலையத்தினர் தமது 20வது ஆண்டு நிறைவு விழாவையொட்டிப் பல்வேறு போட்டிகளையும் நடாத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்

இம்மாதம் 24ந் திகதி அகில இலங்கை 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும், அடுத்த மாதம் 1ந் திகதி 25 மைல் ஆண்கள் சைக்கிளோட்டம், விநோத உடைப் போட்டி ஆகியனவும் நடைபெறவிருக்கின்றன.

......

## நீச்சல்போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு பருத்தித்துறைத் தொகுதியில் புத்தாண்டு விழாவை முன்னிட்டு இன்பருட்டி கடற்கரையில் நடைபெற்ற 3 மைல் நீச்சல் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:

என். அருமைச்சந்திரன், வல்வெட்டித்துறை. கே. சிவராசா, குடத்தனை. எம். மரியதாஸ், பருத்தித்துறை. எஸ். தனபாலசிங்கம், வல்வெட்டித்துறை. ஏ. நடேசதாசன், வல்வெட்டித்துறை.

இப்போட்டிக்கு விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கதிர்காமத்தம்பி பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

......

## இசைவிழா
## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள் வண்ணை அரசடிப்பிள்ளையார்கோவில் வீதியில் நடைபெற்றுவரும் யாழ். ரஸிக ரஞ்சன சபாவின் 18-வது ஆண்டு இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சி[illegible]ள்:-

மாலை 6-30 [illegible]ரி: அரியாலை சகோதரர்கள் பாலசிங்கம், பரமசாமி ஆகியோரின் இன்னிசை.

8மணி: டாக்டர் க சிவஞானசுந்தரத்தின் தலைமையுரை.

8-15 மணி: லிங்கம் சகோதரர்கள் சண்முகலிங்கம், கனகலிங்கம் ஆகியோரின் இன்னிசை.

9-45 மணி: திரு. பொன் சுந்தரலிங்கத்தின் இன்னிசை. (கா. நி.

மணிமுதல் 11 மணிவரை 'அளவையூர் சஞ்சீவி' விஞசித்தம்பி திருவிளையாடற் புராணம்பற்றி கதாப்பிரசங்கம் செய்துவருகிறுர். இம்மாதம் 22-ந் திகதி செவ்வாய்க்கிழமை மஞ்சமும் 29-ந் திகதி சம்பரமும் 30-ந் திகதி இரதோற்சவமும் நடைபெறும். அடுத்த மாதம் மூன்றுந் திகதி சண்டேஸ்வரர் திருவிழாவில் திரு. விஞசித்தம்பியைப் பாராட்டிக் கௌரவிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாம்.

யாழ்ப்பாணம்: திங்
புகையிலை காயப்போடுவதில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து 42 வயது நபர் ஒருவர் கத்தியால் படுமோசமாகக் குத்தப்பட்டாராம்

வேலணைப் பகுதியில்நடைபெற்ற இச்சம்பவத்தில் வயிற்றிலும், முதுகிலும் பலத்த காயங்களுடன் நாகலிங்கம் இராஜகோபால் எ பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசார் இராசேந்திரம் என்பவரைத் தேடிவருகின்றனர். சந்தேக நபர் இன்னமும் கைதாகவி லை (கா. நி.)

திருக்கோணமலை, ஞாயிறு மூதூரின் புதிய இறங்குதுறையும் பழைய இறங்குதுறையும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றேனும் நல்லமுறையில் திருத்தியமைக்கப்படவில்லையென இங்குள்ள பொதுமக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்,


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க






# கப்ஸ்டன்
சிகரெட்டுகளை வாங்குங்கள்
அவை நல்ல புகையிலைக்
கலவை கொண்டவை

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்



வின்ஸர் நாளை முதல்
சிவாஜி கணேசன், ஜெயலலிதா, ஜோதிலட்சுமி
நாகேஷ், தங்கவேல், சோ நடித்தது
இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய

# கலாட்டா கல்யாணம்

இது போன்ற முதல்தர படங்கள் திரையிடுகையில் தூர இடங்களிலிருந்து வருபவர்கள் இடமின்றித் திரும்பாதிருக்க முன் கூட்டியே பல்கனி, றிசேவ்ட் ஆசனங்கள் பதிவு செய்துகொள்ளலாம்.


GRANT-[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு - இஸ்ரேல் படைகள் இரு முனைகளில் பலத்தமோதல்

## யூதர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாம்

கெய்ரோ, ஏப். 20

**இஸ்ரேலியருக்கும் அரபுப் படைகளுக்குமிடையில் நேற்று பலமணி நேரங்கள் இருமுனைகளில் பலத்த சண்டை நடைபெற்றது.**

**இருதரப்பினரும் பீரங்கிகளாலும், ராக்கட்டுகளாலும் தாக்கிக்கொண்டார்கள். இருதரப்பினருமே மறுதரப்பினர்தான் சண்டையை ஆரம்பித்ததாகக் குற்றஞ் சாட்டினுர்கள்.**

ஜோர்டானிய துருப்புகளுக்கும் இஸ்ரேலியருக்குமிடையில் ஜோர்டான் பள்ளத்தாக்கின் வடபகுதியில் ஏற்பட்ட சண்டை சுமார் இரண்டரை மணித்தியாலம் நீடித்தது

இருபத்தைந்து இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர் அல்லது காயமுற்றனர் என்று ஜோர்டானியர் அறிவித்துள்ளனர். இஸ்ரேலியரின் ராணுவ வாகனங்கள் பலவும் நிர்மூலமாக்கப்பட்டதாக அவர்கள் அறிவித்தனர். ஆனுல் தங்கள் தரப்பில் ஒருவர் மட்டுமே காயமடைந்ததாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

சுவேஸ்கால்வாயின் குறுக்கே சைனுய் பாலைவனப் பகுதியில் இஸ்ரேலியருக்கும் ஐக்கிய அரபுப்படைகளுக்குமிடையில் நடைபெற்ற இன்னொரு சண்டையில் இஸ்ரேலியருக்கு பலத்த சேதம் விளைவித்ததாக அரபுத்தரப்பினர் கூறுகின்றனர். ஆனுல் இதிலும்ஒரு இஸ்ரேலியர் மட்டும் காயமடைந்ததாக டெல் அவிப் அறிவித்தல் ஒன்று கூறியது.

### பலமான பாதுகாப்பு

இஸ்ரேலியர் அரபுப்படைகளிடமிருந்து தமது படைகளையும் ராணுவ நிலைகளையும் பாதுகாப்பதற்கு பலமான பாதுகாப்பு கவச ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும், இதனுல் அரபுதரப்பினர்எத்தனை தாக்குதல் நடத்தினு

### பெங்குரியன் யோசனை

மேற்காஸியாவில் அமைதி ஏற்படுவதற்கு உதவுவதாயின் இஸ்ரேலியர் தாம் பிடித்துக்கொண்டுள்ள அரபுப் பிரதேசத்தில் ஜெருசலத்தைத்தவிர மற்றப்பகுதிகளையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று முன்னுள் இஸ்ரேலிய பிரதமர் திரு. டேவிட்பெங்குரியன் யோசனை தெரிவித்திருக்கிருர்.

### ஜோர்டான் மன்னர்

ஜோர்டான் மன்னர் ஹுசேன் அமெரிக்காவில் அதிபர் நிக்ஸனுடன் ஆலோசனைகள் கலந்தபின்பு இப்பொழுது லண்டனுக்கு விஜயம் செய்திருக்கிருர். மேற்காஸியநிலைமைபற்றி மன்னர் ஹுசேன் லண்டனில் பிரிட்டிஷ் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்காஸிய நெருக்கடி தீர்வதற்கு வாஷிங்டனில் மன்னர் ஹுசேன் வெளியிட்ட கருத்துக்களுக்குகெய்ரோவில் தகுந்த வரவேற்பு இருக்கவில்லையென்று அவர் அதிருப்தி கொண்டிருப்பதாக அவதானிகள் கூறுகிருர்கள். ஆனுல் ஜோர்டான் பிரதமமந்திரி இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில் மன்னர் ஹுசேன் வாஷிங்டனில் புதிதாக திட்

## தமிழ்நாடு வரட்சிக்கு ரூ. 2 கோடி

புதுடில்லி, ஏப்ரல்20

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சிக் கஷ்டங்களைப் போக்குவதற்கு உடனடி உதவியாக இரண்டு கோடி ரூபாவை மத்திய அரசு வழங்கியிருக்கிறது.

பாரதபிரதமர் திருமதி காந்தி தமிழ்நாட்டில் வரட்சிப்பகுதிகளைப் பார்வையிட்டுச்சென்றதைத்தொடர்ந்து இந்த உதவி வழங்கப்பட்டிருக்கின்றது. வரட்சிநிலைமை பற்றி தமிழ்நாடுஅரசுசமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் ரு 17-72 கோடிதேவையென்று கேட்டிருக்கிறது. இந்தஅறிக்கைபற்றி மத்திய அரசு இனிமேல்தான் முடிவு செய்யும்.

## அண்ணு சமாதியில் வைஜயந்தி

சென்னை, ஏப்ரல் 20

தமிழ்நாடு முன்னுள் முதலமைச்சர் அமரர் அண்ணுதுரையின் சமாதியில் நடிகை வைஜந்திமாலா தனது கணவருடன் போய் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்திஞர்.

தமிழ்நாடு நாடக சங்கீத

## நேட்டோ போர் பயிற்சி

ஏடன், ஏப். 20

மத்தியதரைக் கடலில் வடஅட்லாண்டிக் ராணுவ கூட்டு நாடுகளின் போர் பயிற்சியொன்று இன்று ஆரம்பமாகிறது. இந்தப் பயிற்சியில் அறுபது சண்டைக் கப்பல்களும், 3000 விமானங்களும் ஈடுபடுகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற ஐந்து நாடுகளின் கப்பல்களும், விமானங்களும் இந்தப் பயிற்சியில் கலந்து கொள்கின்றன.

......

## மூன்று நாள் கருத்தரங்கு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

நாட்டின் பல்வேறு உற்பத்திகள் அபிவிருத்திகள் பற்றியும் ஆராய்வதற்காக யாழ்ப்பாண காரியாதிகாரி பிரிவினுல் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் மூன்று நாள் கருத்தரங்கு இன்று திருநெல்வேலி பலநோக்கக்கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய கருத்தரங்கின் நிகழ்ச்சிகள்:

காலை 10 மணி: யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு எச். ஈ. புள்ளைநாயகத்தினுல் ஆரம்பஉரை நிகழ்த்தப்படும். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட கிராமமுன்னேற்ற பயிற்சி நிலைய பொறுப்பதிகாரியால் ''சமூக புனருத்தாரணம்'' பற்றியும், கிராம முன்னேற்ற சிரேஷ்ட மேற்பார்வையினரால் 'சிரமதான இயக்கம்' பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தப்படும்.

நண்பகல் 12-15க்கு கலந்துரையாடல். கருத்தரங்கு மீண்டும் 2-15 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். மேற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், அமெரிக்க சமாதானப் படைத் திட்டம் [illegible], யாழ். மாவட்ட கிராமமுன்

## சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

### கைக்குண்டு வீச்சுவழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

பருத்தித்துறை, ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த நுணுவில் பகுதியில் சென்ற வருடம் எஸ். மாணிக்கம் என்னும் சிவரத்தினம் என்பவர்மீது கைக்குண்டு வீசியதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட வ. கந்தன், கந்தன் இராசரத்தினம், கந்தன் செல்வராசா என்பவர்களின்மீதான வழக்கு இவ் வருடம் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜாவால் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டு சந்தேக நபர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டனர். ஆனுல் மூன்று நபர்களையும் தலா2500ரூபா பிணையில் விடுதலைசெய்யுமாறு அட்டோனி ஜெனரல் விடுத்த உத்தரவின் பேரில் மூவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கு அடுத்த பருவ நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படுமெனத் தெரிகிறது.

அமைச்சர் பிரேமதாஸாவின்

## வவனியா, முல்லைத்தீவுப்பகுதி இரண்டு நாள் விஜயம்

முல்லைத்தீவு, ஞாயிறு

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தமது அமைச்சு அதிகாரிகள் சகிதம் இம்மாதம் 22ம் திகதியிலிருந்து இரண்டு நாள் விஜயத்தை வவனியா முல்லைத்தீவுப் பகுதிக்கு மேற்கொள்கின்ருர்.

22-ம் திகதி காலை 7-45 மணிக்கு வவனியாவை வந்தடையும் அமைச்சரை பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நகரசபைத் தலைவர் ஆகியோர் சென்று வரவேற்பார்கள்.

இரண்டு நாள் நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:-

22-ம் திகதி காலை 8 மணி: வவனியா மாவட்ட நகரசபை. பட்டின சபை, கிராமசபைத் தலைவர்களைச் சந்தித்தல். காலை 8-30, நாகவிகாரைக்குச் சென்று வழிபடுதல். காலை 10-00 மணி: மாவட்ட ஆணைக் [illegible] செட்டிக்குளம் கிழக்கு மேற்கு பகுதிக்கு விஜயம் செய்தல் மாலை 5 மணிக்கு சின்னச்செட்டிக்குளம்கிராம சபை புதிய கட்டடம் திறந்து வைத்தல் இரவு 8 மணிக்கு வவனியாநகரசபையினரால் அமைச்சருக்கு இராப்போசனவிருந்து வழங்கப்படும்.

23-ம் திகதி காலை 10 மணிக்கு ஓமந்தையில் புதிய நூல் நிலையத்தைத் திறந்து வைத்தல் காலை 11 மணிக்கு கிழக்குமூலை பறங்கி ஆற்றின் மேல் புதிதாக அமைத்த நவீன பாலத்தைப் பார்வையிடல்.

நண்பகல் 12-30 மணி நெடுங்கேணி புதிய கிராம சபையில் அலுவலகத்தைத் திறந்து வைத்தல். மாலை 4 மணி கரிக்கட்டு மூலை வடக்கு முள்ளிவாய்க்கால் புதிய கிராமசபை அலுவலகத்தைத் திறந்து வைத்தல்.

பிற்பகல் 6 மணிக்கு முல்

## 'ஈழநாடு' முதலெழுத்து விகடப் போட்டி - (1)

இது மிகவும் நவீனமான ஒரு போட்டி. வேறு எந்த பத்திரிகையிலாவது இப்படி ஒரு போட்டியை நீங்கள் பார்த்திருக்கமுடியாது. இதில்வெற்றிபெறுவதற்கு நீங்கள் புத்தகங்களையும் அகராதிகளையும் புரட்டவேண்டியதில்லை. உங்கள் சொந்த சாமர்த்தியத்தாலும் உங்கள் நகைச்சுவை உணர்ச்சியாலும் வெற்றி பெறக்கூடிய மிக எளிதான போட்டி. இனிப் போட்டி விபரங்களைப் பார்ப்போம்.

### விபரங்கள்

எழுத்து சிக்கனத்துக்காக சங்கங்கள், சபைகள், கழகங்களின் பெயர்களை அவற்றின் முதலெழுத்துகளைக் கொண்டே எழுதுகிறேமல்லவா? உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையை ஐ. நா. சபை என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தை தி. மு. க. என்றும் குறிப்பிடுகிறேம்.

ஆனுல் சில சமயம் கேலியோ கிண்டலோ செய்வதற்காக அந்த முதல் எழுத்துகள் வரக்கூடிய வேறு சொற்களையும் உபயோகிக்கிறேம். உதாரணமாக, இலங்கை போக்குவரத்து சபையின் இ. போ. ச.வை மாற்றி 'இதில் போவது சங்கடம்' என்று சிலர் கிண்டல் செய்கிருர்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது

இந்த முதலாவது முதலெழுத்துப் போட்டியில் நீங்கள் செய்யவேண்டியது இது தான்.

இ. ஒ. கூ. என்பது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முதலெழுத்து சுருக்கம். நீங்கள் இ. ஒ. கூ. என்ற முதல் எழுத்துகள் வரக்கூடியதாக வேறு சொற்களை அமைத்து ஒரு புதிய பெயரை எழுதித்தரவேண்டும். இப்பெயர் உயர் தரமான நகைச்சுவையுடையதாய், கீழ்த்தரமான கேலி இல்லாததாய், ஆபாசமில்லாததாய் இருக்க வேண்டும் அதைப் பார்த்தவுடனே மனதில் துவேஷமோ அருவருப்போ இருக்கப்படாது. ஆனுல் வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் அர்த்தபுஷ்டி உள்ளதாய் இருக்கவேண்டும்.

### போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை விடைகளையாவது எழுதி ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். பெயர் வில சங்களைத் தெளிவாக எழுத வேண்டும்.

2. விடைகளுடன் கூட இப்பத்தியின் அடியில் காணப்படும் கூப்பன் ஒன்று கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டும். கூப்பன் இல்லாத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படா.

3. விடைகள் வருகிற 25-ம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். அனுப்பும் விலாசம்: முதல் எழுத்துப் போட்டி - (1), 'ஈழநாடு' மே/பா., த. பெ. இல 49, யாழ்ப்பாணம். 'ஈழநாடு' காரியாலயத்திலுள்ள தபால் பெட்டியிலும் விடைகளைச் சேர்க்கலாம்.

4. போட்டிக் குழுவின் தீர்ப்பு முடிவானது, இதுசம்பந்தமாக கடிதப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளவேண்டாம்.

5. 'ஈழநாடு' காரியாலயத்தில் பணியாற்றுபவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது,

6. போட்டியில் வெற்றி பெறுபவரின் பெயரும் விலாசமும் இரண்டாவது முதலெழுத்துப் போட்டி 30-4-69-இல் வெளியாகும்போது தெரிவிக்கப்படும். அவருக்குரிய பரிசுப்பணம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

7. மிகச்சிறந்த விடைக்கு ரூபா பத்தும் அடுத்ததற்கு ரூபா ஐந்தும் பரிசுப்பணங்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இஸ்ரேலிய அரபுப்படைகளிடமிருந்து தமது படைகளையும் ராணுவ நிலைகளையும் பாதுகாப்பதற்கு பலமான பாதுகாப்பு கவச ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும், இதனுல் அரபுதரப்பினர் எத்தனை தாக்குதல் நடத்ினுலும் தங்களுக்குச் சேதம் அதிகம் ஏற்படுவதில்லையென்றும் இஸ்ரேலிய ராணுவ அதிகாரி ஒடுவர் கூறினுர்.

இருக்கவில்லையென்று அவர் அதிருப்தி கொண்டிருப்பதாக அவதானிகள் கூறுகிறுர்கள். ஆனுல் ஜோர்டான் பிரதமமந்திரி இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில் மன்னர் ஹுசேன் வாஷிங்டனில் புதிதாக திட்டமெதையும் வெளியிடவில்லையென்றும் அவர் வெளியிட்ட ஆறுஅம்ச யோசனை ஏற்கனவே பாதுகாப்புச் சபை தீர்மானத்தில் கண்டிருக்கும் யோசனைகள்தான் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முன்னுள் முதலமைச்சர் அமரர் அண்ணுதுரையின் சமாதியில் நடிகை வைஜந்திமாலா தனது கணவருடன் போய் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்திஞர்.

தமிழ்நாடு நாடக சங்கீத சங்கம் சிறந்த நடிகையென்று அளித்துள்ள கெளரவத்தை ஏற்றுக்கொள்வதற்காக நடிகை வைஜந்திமாலா பம்பாயிலிருந்து சென்னை வந்திருக்கிறுர்.

துரையாடல். கருத்தரங்கு மீண்டும் 2-15 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். மேற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், அமெரிக்க சமாதானப் படைத் தொண்டர்கள், யாழ். மாவட்ட கிராமமுன்னேற்ற பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முறையே கூட்டுறவு இயக்கம், சமூகவாழ்வும் ஒழுக்கமும், சமாதானப்படை ஆகியனபற்றி ஆய்வுரை நடத்துவார்கள்.

மாலை 4-30 மணிக்குக் கலந்துரையாடல். நாளை காலை 10 மணிவரை கருத்தரங்கு ஒத்திவைக்கப்படும்.

(கா. நி.)

22-ம் திகதி காலை 8 மணி: வவனியா மாவட்ட நகரசபை, பட்டின சபை, கிராமசபைத் தலைவர்களைச் சந்தித்தல். காலை 8-30, நாகவிகாரைக்குச் சென்று வழிபடுதல். காலை 10-00 மணி: மாவட்ட ஆணைக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளல்.

வவனியா எம்.பி.திரு.தா. சிவசிதம்பரத்தால் மதிய போசனம் வழங்கப்படும். மாலை 3 மணிக்கு சின்னச் சபையில் அலுவலகத்தைத் திறந்து வைத்தல். மாலை 4 மணி கரிக்கட்டு மூலை வடக்கு முள்ளிவாய்க்கால் புதிய கிராமசபை அலுவலகத்தைத் திறந்து வைத்தல்.

பிற்பகல் 6 மணிக்கு முல்லைத்தீவில் ஊர்வலமும், வரவேற்புபசாரக் கூட்டமும் இரவு 9 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து அநுராதபுரம் புறப்படல்.

6. போட்டியில் வெற்றி பெறுபவரின் பெயரும் விலாசமும் இரண்டாவது முதலெழுத்துப் போட்டி 30-4-69-இல் வெளியாகும்போது தெரிவிக்கப்படும். அவருக்குரிய பரிசுப்பணம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

7. மிகச்சிறந்த விடைக்கு ரூபா பத்தும் அடுத்ததற்கு ரூபா ஐந்தும் பரிசுப்பணங்களாக வழங்கப்படும்.

## 'ஈழநாடு' முதலெழுத்துப் போட்டி-(1)

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

..........................................

திகதி : ..........................................

வடகொரிய எல்லையில்

# யு. எஸ். வேவு விமானங்கள் மீண்டும் பறக்கின்றன

வாஷிங்டன், ஏப்ரல் 20

வடகொரியா எல்லைப்பகுதியில் மீண்டும் அமெரிக்க விமானங்கள் வேவு பார்ப்பதில் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

ஜப்பானிய கடற்பிரதேசத்திலுள்ள அமெரிக்கத் துருப்புகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்என்று அதிபர் நிக்ஸன் அறிவித்ததைத் தொடர்ந்து இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானியக் கடலில் வடகொரியா அமெரிக்க வேவு விமானத்தைச் சுட்டுவீழ்த்திய பகுதிக்கு மேலும் அதிக சண்டைக் கப்பல்களையும் விமானங்களையும் அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது.

சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்த 31 பேரில் இருவரின் சடலங்கள் மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

மேற்கொண்டு தேடுதல் நடத்துவது கைவிடப்பட்டுள்ளது.

# கிறிஸ்தவர்கள் கோஷ்டி மோதல்

## வடஅயர்லர்ந்தில் சம்பவம்

லண்டன், ஏப். 20

வட அயர்லாந்தில் சிவில் உரிமை போராட்டக்காரர்களுக்கும் இன்னெருபகுதியினருக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் நூற்றுக்கு மேலானவர்கள் காயமடைந்தார்கள். இவர்களில் எழுபதுபேருக்கு மேற்பட்டவர் பொலிசார் ஊர்வலம் ஒன்றைதடை செய்ததால் கத்தோலிக்கர்களான சிவில் உரிமை போராட்டக்காரர்கள் வழிகளில் அமர்ந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதைத்தொடர்ந்து புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு அவர்களுக்குமிடையில் சண்டை ஏற்பட்டது. கற்கள் வீசப்பட்டன. வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. வீடுகள் நொருக்கப்பட்டன. பொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசியும் தடிகளை சுழற்றியும் அமைதியேற்படுத்த முயன்றனர். காயமடைந்தவர்களில் பொலிசார் தான் அதிகம். காயமடைந்த 17 பேர் ஆஸ்பத்திரிகளில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

வலி. வடக்கில்

## மலேரியா தடுப்பு நடவடிக்கை

அளவெட்டி, ஞாயிறு

வலி-வடக்கில் மலேரியாத் தடுப்பியக்கம் வலுவடைந்துள்ளது.

வலி-வடக்குப் பகுதியில் சென்ற சில மாதங்களாக மலேரியாத் தடுப்பியக்கம் தடுப்பு நடவடிக்கை எடுக்காததால் 20க்கும் அதிகமானவர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பளையில் உள்ள சுகாதார செளக்கிய நிலையத்தினர் மேலும் மலேரியா நோய் வலி-வடக்கில் பாதிக்காமலிருக்க டி. டி. ரி. தெளிப்பதற்கான நடவடிக்கைளை எடுத்துள்ளனர்.

டி. டி. ரி. தெளிப்பவர்களும், அவர்களை மேற்பார்வை செய்பவர்களும் நேற்று முன்தினம் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாகினர்.

இந்த வாரத்தில் டி. டி. ரி. தெளிக்க இவர்கள் ஆரம்பிப்பார்கள்.

## புதிய பஸ்சேவை கோரி மகஜர்

இமையாணன், ஞாயிறு

மந்திகை ஆஸ்பத்திரி ஊடாக ஒரு புதிய பஸ் சேவையை ஆரம்பித்துத் தருமாறு கோரும் மகஜர் இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், பருத்தித்துறை டிப்போக்களின் தலைவர்களுக்கும் உடுப்பிட்டி எம். பிக்கும் உடுப்பிட்டி மக்களினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான பிரயாணிகள் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள இம்மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:

'வடமராட்சி மக்களின் முக்கிய வைத்தியசாலையாக விளங்கும் மந்திகை வைத்தியசாலைக்கு, உடுப்பிட்டி, இமையாணன், நவிண்டில், சமரவாகு, கரணவாய் வடக்கு ஆகிய பகுதிமக்கள் அவசரத்திற்குச் சுலபமாகவும் நேராகவும் செல்லக்கூடிய பஸ்சேவை இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஊடாகவே பயணம் செய்து மந்திகைக்குச் செல்லவேண்டியுள்ளது. ஆகவே இப்பகுதி மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கு உடுப்பிட்டி நவிண்டில்- மாலிசந்தி ஊடாக மந்திகைக்கு சுலபமாகச் சென்றுவர ஆஸ்பத்திரி நேரமாகிய காலை, மத்தியானம், மாலை நேரங்களில் ஒரு புதிய பஸ் சேவையை ஒழுங்கு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேம்.

## விருந்து உபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை வடகிழக்கு சனசமூக நிலையத்தின் சார்பில், முதல்வர் திருஎஸ் நாகராசா மாநகரசபை உறுப்பினர்களான திரு. ரி. எஸ் துரைராசா, திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆகியோருக்கு தேநீர் விருந்து உபசாரம் நடைபெற்றது. திரு. எஸ் சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு என். செல்லப்பா, திரு. எஸ். யூ. சோமசேகரம் மற்றும் பலர் பேசினுர்கள்.

## நான்காவது சேக்கிழார்விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் நான்காவது சேக்கிழார் விழாவும் குருபூசையும் மே மாதம் 22-ம் 23-ம் திகதிகளில் நடைபெற விருக்கின்றன.

இம் முறை இந்தியாவிலிருந்து பேராசிரியர் ஒளவை துரைசாமிப்பிள்ளை விழாவிற் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் என்றும் மன்றச் செயலாளர் தெரிவித்தார். கருத்தரங்கம், இசைநிகழ்ச்சிகள், பரிசுவழங்கல், நாடகங்கள், உள்ளூர் அறிஞர்களின் சொற்பொழிவுகள் ஆகியனவும் இடம் பெறும் எனத் தெரியவருகிறது.

இரணைதீவில்

## மீனவருக்கு வீட்டுத்திட்டம்

பூநகரி, ஞாயிறு

இரணைதீவில ஒரு புதிய மீனவர் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. இத்திட்டத்திற்கான அத்திபாரக் கல்லை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் நேற்றுமுன்தினம் நாட்டிவைத்துப் பேசும்போது குறிப்பிட்டதாவது: இத்திட்டத்தில் மீனவர்களுக்கு அரசாங்கத்தால் 25 வீடுகள் கட்டப்பட்டு விரைவில் கிடைக்க இருக்கின்றன. அத்துடன் தலா 1800 ரூபா வீதம் தொழில் உதவிப்பணமும் வழங்கப்படும். பூநகரி காரியாதிகாரி எம். இராசரத்தினம், கடற்தொழில் பரிசோதகர் ஏ. எலியாஸ் ஆகியோரும் இவ்வைபவத்தில் பேசினர்.

# "திருமுறைவகுத்தநம்பிக்கு குருபூசை வேண்டும்"

## புங்குடுதீவுசிவஞானத் தமிழ் விழாவில் கருத்து

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"சைவ சமயத்தின் அரும்பரும் செல்வமான திருமுறைகளைக் கண்டு, வகுத்து எம்மை உய்விக்க, உயர் தொண்டாற்றிய நம்பியாண்டார் நம்பிக்கு சைவர்கள் விழா எடுக்கவேண்டும். அன்னரது குருபூசைத் தினத்தையாவது அனுட்டிக்கவேண்டும். பெரிய புராணத்திற்கு முன்னேடியாகத் திகழும் நம்பியாண்டார் நம்பியின் நற்றெண்டைச் சேக்கிழார் பெருமான் குருபூசைத் தினத்திற்கு முன் கொண்டாடுதல் சாலவும் பொருந்தும். சைவச் சான்றேரும் சேக்கிழார் மன்றமும் இதில் கவனம்செலுத்த வேண்டும்."

புங்குடுதீவு வரசித்தி விநாயகர் மகாகும்பாபிஷேக தினத்தையொட்டி நடைபெறும் சிவஞானத் தமிழ்விழா இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளின்போது 'திருமுறை கண்ட நம்பி' என்ற விஷயம் பற்றிப் பேசிய வித்துவான் சைவப்புலவர் திரு. க. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமரர் நாகலிங்கம் அரங்கில் சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

'விநாயக தத்துவம்' என்ற விடயம் பற்றிப் பேசிய பண்டிதர் திரு. செ. சிவப்பிர காசம், விநாயக வணக்கம் மகத்தான சக்தி வாய்ந்ததெனவும், அறிவின் பெருமை உணர்த்தும் தத்துவக் கருத்துக்களை நாம் அறிந்து, அதன் சிறப்பை உணரவேண்டுமெனவும், விநாயக வழிபாடு சைவ உலகில் வளர்ச்சிபெறவேண்டும் என்றும் சொன்னுர்.

பண்டித வித்துவான் திரு. க. கி. நடராசன் பி. ஓ. எல். பேசியதாவது:

சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம், சைவப் பெருங் காப்பியமாகும். திருமுறைகளை அறிந்து அடியார்களின் தன்மைகளை ஆராய்ந்து அன்பின் ஆர்வத்தால், ஆத்மீக உணர்ச்சியால் வசப்பட்டு யாத்த நூல் பெரிய புராணமாகும். இலகுவான சொற்களைக் கொண்ட, பொருட் செறிவான நயத்தில் கம்பராமாயணத்தையும் மிஞ்சக்கூடிய பெரிய புராணம், சைவப் பெருமக்களாகிய எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அதனைப் போற்றிப் பாராட்டுவதோடு அதன்வழி நின்று வாழவும் வேண்டும்."

வித்துவான் பொன். கனகசபை நன்றி கூறிஞர். கலை நிகழ்ச்சியாக லிங்கம் சகோதரர்களின் இன்னிசைக் கச்சேரியும் விழாவில் இடம் பெற்றன.

## புதிய ஜே. பி. க்கு பாராட்டு

நெடுந்தீவு, ஞாயிறு

அண்மையில்சமாதானநீதவான் பட்டம்பெற்ற திரு. சி. வ. கந்தையாவுக்கு இங்கு ஒரு பாராட்டுவிழா நடாத்தப்பட்டது. கிளிநொச்சி எம். பி, உட்பட பல உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள் விழாவில் கலந்து கொண்டு புதிய சமாதான நீதவானின் சிறப்பியல்புகளைப் பாராட்டிப் பேசினர். கிராமசபைத் தலைவர் திரு. ஆ. கந்தையா வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டி, கோயிற்பற்று பஸ் பிரயாணிகள் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு எம். பி. செல்வரத்தினமும், செயலாளராக கே. இராசரத்தினமும் தெரியப்பட்டார்கள். எஸ். கந்தசாமி, கே. செல்வரத்தினம், கே. தணிகாசலம், கே. குமாரசாமி, ஜே. பரராஜசேகரம், ஆர். கணேசலிங்கம் ஆகிய அறுவர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரியப்பட்டது.

(கா. நி)

## பாலம் உடைந்து 6 வருடங்கள்

### இன்னும் திருத்தப்படவில்லை

பூநகரி, ஞாயிறு

பூநகரி ஞானிமடம் என்னும் கிராமத்திலிருந்து சங்குப்பிட்டித் துறைக்குச்செல்லும் பிரதான வீதியில் உள்ள பாலம் 6 வருடத்துக்கு முன் உடைந்திருந்தபோது எந்தவித வாகனமும் பாலத்தின் மேலாகப் போகக் கூடாதென அரசினர் அறிவித்திருந்தனர். இன்னும் இப்பாலம் திருத்தப்படவில்லை. இதனுல் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றனர்.

## தரம் குறைந்த அரிசி

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவுப் பகுதியில் கூப்பனுக்கு தற்சமயம் வழங்கப்படும் அரிசி மிகவும் தரம் குறைந்தது. அத்துடன் நூற்றுக்கு அறுபது வீதம் நெல்லும் உமியும் கலப்படம் செய்து விநியோகிக்கின்றனர். இந்த அரிசி முல்லைத்தீவு அரசாங்க அரிசி விநியோக நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்த அரிசியை வழங்குவதால் மக்கள்கூடிய பணம் கொடுத்து அரிசி வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## வெட்டிக்காயம் ஏற்படுத்தியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அல்வாய் தெற்கைச் சேர்ந்த தங்கராசா, வயிரவப்பிள்ளை, , தினகரிப்பிள்ளை செல்லப்பா ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த கே. வல்லிபுரத்திற்கு கடந்த வருடம் மார்கழி மாதம் 24-ந் திகதி கத்தியால் வெட்டி படுகாயப் படுத்தியதாக பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்கொன்றை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாஜிஸ்திரேட் இவ்வழக்கை விசாரணை செய்வதற்காக அடுத்த மாதம் 12-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## வெற்றிலைக்கு தட்டுப்பாடு

திருக்கோணமலை, ஞா.

திருக்கோணமலையில்வெற்றிலைக்குப் பெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள மக்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானவர்கள் வெற்றிலை பாவிக்கும் பழக்கமுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## உற்சவம்

வல்வெட்டித்துறை, ஞா.

பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை அம்மன்கோவில் வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. அடுத்த முதலாம் திகதி தேர் விழாவும், இரண்டாம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'வன்முறைக்கிடையே அகிம்சை நெறியைக் கடைப் பிடித்தமுனிவர்கள் நியூட்டனை விடச் சிறந்தமேதைகள்; வெலிங்டனை விடச் சிறந்த போர் வீரர்கள்'

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 3 9

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 9-ந் திகதி (21-4 69)

## விபரீதப் போக்கு

பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை' என்பார்கள். அதைப்போல் தானிருக்கிறது திரைப்பட இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை சில இடங்களில் வன்முறைச் செயலுக்கு வழிவகுத்திருப்பது.

உள்நாட்டில் திரைப்படத் தொழில்வளர்ச்சி பெறவில்லையென்றும் உள் நாட்டுத்திரைப்படத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பொருட்டு வெளிநாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் எழுந்த கோரிக்கை மெதுவாக தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமென விரிவடைந்து 'திராவிட முன்னேற்றக் கழகம், நாம் தமிழர் இயக்கம்' என்ற 'பூச்சாண்டி'களுடன் சம்பந்தப்படுத்தி தி. மு. க. பிரசாரமுள்ள எம். ஜி. ஆர். படங்களை இறக்குமதி செய்வதற்கு தடைவிதிக்க வேண்டுமென்ற கோரிக்கையாகப் பரந்து குமிழ்த்துவேஷமாக உருவெடுத்துக் கொண்டிருப்பதுடன் நாவலப்பிட்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் எம். ஜி. ஆர். படங்கள் திரையிடப்பட்டுள்ள திரைப்பட மாளிகைகள் மீது கல்வீசவும், சினிமா ரசிகர்களையும் தியேட்டர்காரர்களையும் வன்முறைச் செயல் மூலம் மிரட்டுமளவுக்குநிலைமை விஸ்வரூபமெடுத்திருக்கிறது. அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு அரசியல் இலாபம் பெறும் நோக்கத்துடன் இந்தவிஷயத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி எதிர்க்கட்சிகளைச்சேர்ந்தவர்களும் சரி கண்ணை மூடிக்கொண்டு மௌனம் சாதித்

...பேதமிருக்க முடியாது. வெளிநாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதியால் உள்நாட்டுத் திரைப்படத்தொழில் பாதிக்கப்படுமானால் அதற்கேற்ற முறையில் வெளிநாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதியை, இங்குள்ள மக்களில் குறிப்பிட்ட எந்த ஒரு பிரிவினரின் பொழுது போக்கு வாய்ப்பைப் பாதிக்காத முறையில் கட்டுப்படுத்துவதிலும் தவறிருக்க முடியாது.


உள்நாட்டு திரைப்பட உற்பத்திக்கு வேண்டிய பிலிம் மற்றும் சாதனங்கள் தட்டுப்பாடில்லாமலும் நியாயமான விலையிலும் கிடைப்பதற்கு அரசாங்கம் வசதி செய்துகொடுக்கலாம். வெளிநாட்டுப் படங்கள் அவை எந்த மொழிப் படங்களானாலும் அவைகளை இறக்குமதி செய்யவும் இங்கு திரையிடவும் அனுமதியளிப்பதற்கு முன் தகுதிவாய்ந்த திரைப்படத் தணிக்கைச் சபை அந்தந்தப் படங்களைப் பார்த்து அவற்றை இறக்குமதி செய்யவும் இங்கு திரையிடவும் அனுமதியளிக்கலாம். இப்பொழுதும் திரையிடப்படத்தணிக்கைச் சபை இருக்கிறது. சில படங்களை அவை திரையிடப்படலாகாது என தணிக்கை செய்துமிருக்கின்றன. திரைப்படங்களை இறக்குமதி செய்து திரையிட அனுமதியளித்த பின் அந்தப்படங்கள் திரையிடப்பட்டுள்ள தியேட்டர்கள் மீது கல்வீசுவதும் அப்படங்களைத் திரையிடக்கூடாதென்றும் சிலர் நடந்து கொள்வதற்கு அனுமதியளித்தால் இங்கு அரசாங்கமோ சட்டம் ஒழுங்கோ இருப்பதாகக் கொள்ள முடியுமா?

தமிழ்த் திரைப்படங்களைப் பார்க்கச்செல்வோர் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களே திரைப்பட மாளிகைக...

இன்று மகாகும்பாபிஷேகம்

# திருவும் அருளும் பொலியும் புங்குடுதீவு வரசித்திவிநாயகர்

[இன்று இங்கு நடைபெறுவது 3-வது மகா கும்பாபிஷேகமாகும். இம்மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு இவ்வாலய கிழை வீதியில் கடந்த 17-ம் திகதி தொடக்கம் நேற்றுவரை நான்கு நாட்கள் சிவஞானத் தமிழ்விழா நடந்தேறியது தெரிந்ததே.]



ஆயிரத்து எண்ணூற்றுப் பதினைந்தாம் ஆண்டு, புங்குடுதீவு வரகவி முத்துக்குமாருப் புலவரும் அவருடன் கூடிய சிவனடியார் திருக்கூட்டமும் சிதம்பரம் போயிருந்தபோது, அவர்களுடன் புங்குடுதீவு கலட்டியம்பதிப் பூக்கிழவி அம்மையாரும் சென்றிருந்தார். அம்மையார் விக்கினேஸ்வர உபாசனை செய்பவர். சிதம்பரம் போய்வந்து பிணியுற்றுக் கிடந்தார். அந்தச் சமயம் யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோவில்கொடியேற்றித் திருவிழா நடந்தது. அந்த விழாவுக்குப் போகமுடியவில்லையே என்று மனம் நொந்து நித்திரையானார். அவரது சொப்பனத்திலே விநாயகர் தோன்றி "நீ கவலைப்படாதே' உனது வீட்டின் கிழக்குப் பக்கமாக... பிட்டுப் பூசிக்கத் தொடங்கிய இடந்தான் கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தின் தொடக்கமாகும்.

முதலாவது கும்பாபிஷேகம்.

புகழ்பெற்ற ஆலயங்களை ஒல்லாந்தரும் இடச்சுக்காரரும் இடித்தழித்த பின் சைவத் தமிழ் மக்கள் அந்த இடங்களுக்குப் பக்கத்தில் மடங்கள் கட்டி தமது மொழியையும் சமயத்தையும் வளர்த்தனர். புங்குடு தீவிலும் நல்லையபற்று மடம், அன்னதான முதலி மடம், இனங்காத்த முதலி மடம் கணபதி உடையார் மடம் என பல தமிழ் வளர்க்கும் நிலையங்கள் இருந்தன.

அவற்றின் பக்கத்தே அம்பாள் ... ரர் - ... அமைக்கப்பட்டன. சமய...

...யங்களாக அவை விளங்கி நின்றன. அதனால் முதியோரும் இளைஞரும், மங்கையரும் மூதாட்டியரும் சென்று செந்தமிழ்ச் சைவப் பண்புகளிற் திளைத்திருந்தனர். இந்த வரிசையில் முந்தி நின்றது கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம். அதில் பூசகராயிருந்த இளை ஐயர் (பாண்டையர்) பெரும்பக்திமானும் ஒழுக்க சீலருமாயிருந்தார்.

அடியார்கள் பலர் அந்த அந்தணாளரின் தலைமையில் நிதி சேர்த்தனர். பழைய கோவிலை மாற்றி செங்கற் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடாத்தி பூசித்து வந்தனர் 'உரு ஏறத் திரு ஏறும்' என்ற முதுமொழியை கலட்டி வரசித்திவிநாயகர் நாள்தோறும் காலந்தோறும் உணரவைத்து அருள்சுரந்தார். இந்த விநாயகரை முன்னிட்டுக்கொண்டு செல்லும் அத்தனை பேரும் பிற நாடுகளிலும் நகரங்களிலும் சென்று கல்வி, செல்வம் என்னும் இரு கண்களும் ஒருங்கமையப் பெற்றனர்.

திலகவதியாரும் திருநாவுக்கரசரும் என பெரியோர்களால் மதிக்கப்படும், ஈழத்துச் சிவனடியார் கூட்டத் தலைவர் சிவத்திரு சரவணமுத்து அடிகளாரும் அவரது தமக்கையார் அன்னப்பிள்ளை அம்மையாரும் இந்த வரசித்தி விநாயகரின் ஆலயவடக்கு எல்லையில் வாழ்பவர்கள். அவர்கள் திருநெறிப் பயிற்சிபெற்று செம்மனச் செல்வர்களாய் மலரக் காரணராய் இருந்தவரும் இந்த விநாயகர்தான்.

இந்த விநாயகரை உபாசனை செய்து பெருஞ் செல்வராய் இனங்காத்து புகழ் பெற்ற பெருமை தெய்வீகமடைந்த பொறனை நாகலிங்கம் அவர்களைச் சாரும். அவருடைய அன்பணைப்பில் நின்று கலையும் பண்பும் பயின்று ஈழமணி விளக்குகளாய்த் துலங்கும் அன்பர்கள் பலப்பலர். அவர் வாழ்வாங்கு வாழுஞ் சமயம் ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டு பண்ணைப்படகுவிபத்தில் அவருடைய தர்ம பத்தினியாரும் அருமந்த மகளும் மகனும் தெய்வீகமடைய பொறனையார் பற்றற்ற பரமஞானியானார்.

ஒழுங்காக நடாத்தப்படும் திருக்கோவில்களில் முதற் கோவிலாக நடைபெறும்ஒழுங்குகள் செய்யப்பட்டன. அருளும் அன்பும் கலந்து மலிய மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. தம்மிடமிருந்த பெருநிதியத்தில் பெரும்பங்கு இந்தத் திருப்பணிக்கு ஒதுக்கி தனிநின்று செய்துமுடித்தார்கள்.

### தமிழுரிமைக்கு மகாயாகம்

'இருந்தமிழே உன்னலிருந்தேனே தேவர் விருந்தமுத மாயிடினும் வேண்டேன்' எனத் திருவாய்மலர்ந்த புலவர் வரிசையில்வந்த தமிழ் மக்களுக்கு ஈழத்தில் தமிழ் உரிமை மறுக்கப்பட்டுச் சோதனை ஏற்பட்ட போது, வடமாகாணத்தில் உள்ள அந்தணப் பெரியோர்கள் சேர்ந்து ஆராய்ந்து தெய்வானுக்கிரகம் ஒன்றினாலேயே விமோசனம் கிடைக்குமெனத் தீர்மானித்தனர். ஒரு விக்கினேஸ்வரர் ஆலயத்தில் கோடி அர்ச்சனையுடன் கூடிய மகாயாகம் செய்து தமிழர் சக்தியை உயர்த்த வடமாகாணத்தில் சகல வசதிகளும் உள்ள கலையுள்ள விக்னேஸ்வரர் ஆலயங்கள் பல தேர்வு செய்யப்பட்டன. திருவுளம் ஆராயப்பட்டது. திருவுளமிரங்கி மகாயாகம்செய்யும் இடமாதகத் ம்மைத் தேர்ந்து கொண்டபெருமை இந்தக் கலட்டிவரசித்திவிநாயகரை சேர்ந்தது. ஈழநாட்டில் இப்படியொரு மகாயாகம் நிகழ்ந்தது மிக அருமையென்று சைவச்சான்றோர்கள் மனமகிழ்ந்தனர். அந்த யாகத்தினைத் தலைமைதாங்கி நடத்தியவர்கள் சித்தங்கேணி பிரம்மஸ்ரீ வை. மு. குமாரசாமி குருக்களும் நயினைபிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்களுமாவர். இருபத்தையாயிரம் ரூபாய்க்குமதிகமான செலவில் மகாயாகமும் கோடி அர்ச்சனையும் நடந்தேறின. ஈழமணித்திருநாட்டில் உள்ள சைவத் தமிழர்களில் பெரும்பாலார்கட்டுந்துகொண்டு தமிழ்வீறுல அருட்பொலிவும் பெற்றனர். நாடுமுழுவதும் அருமயம் நிறைந்து ததும்பியது. கலட்டி வரசித்தி விநாயகர் திருவருட்டிறங்களில் இதுவும் ஒன்ருகப் போற்றப்பட்...

## ஐயாறன் எழுதுவது

வண்ணை நகர் சிவன்கோயிலில் ஓர் அமெரிக்க வாலிபர், சைவ முறையில் விவாகம் செய்துகொண்ட காரணங்களைப் பற்றி அவரையே கேட்டேன்.

எம். ஏ. பட்டதாரியான அவ்வாலிபர், தமிழ், சைவ நாகரீகம் பற்றி ஆராய்ச்சி செய்துவருகிருராம். அவரதுமனைவியும் ஓர் எம். ஏ. சமீபத்தில் இருவருக்கும் சட்டப்படி விவாகம் பதிவாயிற்று. சில வாரங்களுக்கு முன் அக்கோயில் திருவிழாவிலே நடைபெற்ற திருக்கல்யாண வைபவங்கள் தம் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகவும். ஆகவே தாமும் அவ்விதமே விவாகம் செய்துகொள்ள விரும்பி, சைவ ஆசார முறைப்படி விவாகம் செய்துகொண்டதாகவும் தெரிவித்தார்.

இத்தம்பதிகள் கத்தோலிக்கரென்றும், ஏதோ வேடிக்கைக்காக இப்படிச் செய்ததாகவும் ஒரு கொழும்புப் பத்திரிகையில் வெளியான செய்தியைப் பார்த்துவிட்டு அவர் பலமாக ஆட்சேபித்தார். தாம் கத்தோலிக்கர் அல்லவென்றும், யூத சமயக் குடும்பத்தில் பிறந்ததாயும், சைவ சமூக ஆசாரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ததில், அம்முறைகள் தம் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகவும், வேடிக்கைக்காக அவ்விதம் செய்ததாகக் கூறுவது அவமதிப்புச் செய்வதாகுமென்றும் தெரிவித்தார்.

அவருக்குத் தமிழ் ஓரளவு எழுதவும், படிக்கவும், பேசவும் தெரிகிறது. முதலில் கோயில் குருக்களைச் சந்தித்து, அவருக்கு ஆகஸ்ய அபிஷேகமும், மூன்று தீட்சைகளும் நடந்துள்ளனவா என்று கேட்டாராம். தாலி அமைப்பிலுள்ள பல விதங்களையும் அறிந்து, விநாயகர் சிற்பத்துடன் கூடிய தாலியையே செய்வித்ததாயும், மணப்பெண்ணும் இதற்காகவென்றே காஞ்சீபுரம் பட்டுப் புடவையை வாங்கி வந்ததாகவும், பலபல ருசியான தகவல்களையும் தெரிவித்தார்.

இக்கல்யாணம் சம்பந்தமாக ஒரு வீட்டில் நடந்த விருந்தில், மாப்பிள்ளை ஆண்களுடனும், மணப்பெண் மற்றப் பெண்களுடனும் சேர்ந்து தமிழ்ப் பண்பாட்டின்படியே சாப்பிட்டனர். தமிழ் நாகரீகத்தை மேலைநாட்டவர் பரிகசித்த காலம் ஒன்றுண்டு. ஆனால் இப்போதோ, மேலைநாட்டினர் தமிழ் முறைகளின் மேன்...

...பற்ற முற்படுவதைப் பார்க்கிருேம்! உலகமே ஒரு குடும்பம்போல் ஆகிவருவதால் இன்னும் என்னென்ன மாறுதல்கள் ஏற்படப்போகின்றனவோ!

0 0 0

யாழ்ப்பாணப் பொது நூல் நிலையத்திலே, அமெரிக்க மலிவுப் புத்தகக் கண்காட்சிககு வருமாறு பென்னெட் என்ற கலாச்சார அதிகாரி அழைப்பு அனுப்பியிருந்தார். பெயரைப் பார்த்ததும் அவர் அமெரிக்க வெள்ளைக்காரரோ என்று நினைத்தேன் ஆனல் நேரில் கண்டபோது, அவர் நீக்ரோவரென்று தெரிந்தது. அவர் தமது மனைவியையும், புதல்வியையும் பெருமையுடன் அறிமுகப்படுத்திஞர்.

அமெரிக்காவில் ஒருபுறம் நிறத்துவேஷ மிருப்பதாகக் கூறப்படினும், நீக்ரோவருக்குப் பொறுப்புள்ள பெரிய பதவிகளை அங்கு அளித்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கண்காட்சியில் வைத்துள்ள நூல்களின் விவரங்களடங்கிய ஒரு 'காடலாக்'கைப் பார்த்தேன். அதில் உள்ள பலபல நூல்களையும் படிக்கப் பல ஜன்மங்கள் வேண்டியிருக்கும்.

இதைப்பற்றி ஓர் அன்பரிடம் கூறியபோது, அவர் இவ்வளவும் படிப்பதில் என்ன பயன் என்று கூறிவிட்டு, ஒரு சின்னக்கதை சொன்னர்.

ஒருவர் மரத்தடியில் படுத்துக்கொண்டு ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாராம். அவரது நண்பர் வந்து, மெத்தப்படித்த நீங்கள் ஏன் இப்படி காலத்தை வீணுக்குகிறீகள்? நீங்கள் ஒரு சின்னப்பத்திரிகையை அச்சடித்து வெளியிடுங்கள். வர வர உங்கள் பேரும் புகழும் பரவும். பின்பு அதிக பத்திரிகைகளை விலைக்குவாங்கி, வெளியிட்டால் பணம் அதிகம் சேரும்' என்ருராம்.

"பணம் அதிகம் சேர்ந்தால் என்ன செய்யலாம்?"

"அதிகம் உழைக்காமல் ஓய்வெடுத்துக் கொள்ளலாம். இப்படி மரத்தடியிலிருந்து இயற்கை அழகுகளை ரஸிக்கலாம் என்று அந்த நண்பர் கூறியதும், அதை இப்பொழுதே செய்துகொண்டிருக்கிறேன்'' என்று அவர் சொல்லி தொடர்ந்து ஆகாசத்தைப் பார்த்தாராம். கற்றதனுல ஆய பயன் என்ன?

0 0 0

பண்ணில ஓசை பழத்தி
லின் இன் சுவை,
பெண்மொழி யென்று
பேசற்கரியவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரூபமெடுத்திருக்கிறது. அடுத்த தேர்தலைக் கருத்தில் கொண்டு அரசியல் இலாபம் பெறும் நோக்கத்துடன் இந்தவிஷயத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி எதிர்க்கட்சிகளைச்சேர்ந்தவர்களும் சரி கண்ணை மூடிக்கொண்டு மௌனம் சாதித்தால் நிலைமைகட்டுக்கடங்காமல் போகலாம்.

உள்நாட்டில் திரைப்படத் தொழில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதில் இங்கு யாருக்கும் ஆட்சேபமிருக்க முடியாது. இதே போல் மக்களைத் தீய வழியில் செலுத்தக் கூடியதரங்கெட்ட திரைப்படங்களை இங்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கக் கூடாது என்பதிலும் அபிப்பிராய ...றும் சிலர் நடந்து கொள்வதற்கு அனுமதியளித்தால் இங்கு அரசாங்கமோ சட்டம் ஒழுங்கோ இருப்பதாகக் கொள்ள முடியுமா?

தமிழ்த் திரைப்படங்களைப் பார்க்கச்செல்வோர் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களே. திரைப்பட மாளிகைகளுக்குச் செல்லும் ரசிகர்களுக்குப்பாது காப்பளிப்பது அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் இதில் அக்கறை செலுத்தத் தவறினாலும் அரசாங்கத்தை வற்புறுத்தி விஷமிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதில் நமது பிரதிநிதிகளுக்கும் பொறுப்புண்டு.

## இ. போ. ச. பஸ் சேவை

தமிழ்-சிங்கள புத்தாண்டைத் தொடர்ந்து இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் பலர் வேலைக்குவராமல் நின்றுவிட்டதாகவும் இதனால் தான் புதுவருடத் தினத்தன்றும் அதற்குப் பின்னரும் வீதிகளில் பஸ் சேவை குறைவடைய நேர்ந்ததென்றும் பஸ்கள் போதிய அளவு இருப்பினும் பஸ் ஊழியர்கள் வராமல் விட்டதுதான் பிரயாணிகள் கஷ்டமடையதற்குக்காரணமென்றும் இ. போ. சபைத் தலைவர் திரு. ஏ. ஆர். பி. விஜயசேகரா தெரிவித்திருக்கிறார். இனியும் இவ்விதம் நேராமலிருப்பதற்காக புதிதாக எந்த ஊழியருக்கும் 'லீவு' கொடுக்கப்படக்கூடாதென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

போக்குவரத்துச்சேவை ஓர் அத்தியாவசியசேவை. பொதுமக்களின் நலன் கருதிஇச்சேவையிலீடுபட்டுள்ளோர் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். இதேசமயம் நேரம் காலம் பார்க்காது சேவை மனப்பான்மையுடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கும் முறையில் இ. போ. சபை நிர்வாகமும் நடந்து கொண்டால் இது போன்று ஊழியர்கள் திடீரென வேலைக்குவராமல் நிற்கமாட்டார்கள். லீவு எடுக்காமலும் நேரம் காலம் பார்க்காமலும் சேவை செய்யும் ஊழியருக்கு விசேஷ போனஸ் அல்லது வேறு வகையில் சலுகைகள் அளித்தால் 'லீவு' எடுப்பவர்கள் வெகுவாகக் குறைந்துவிடுவர். சேவையும் சிறந்தமுறையில் நடைபெறும்.


# பரதநாட்டியப்

வண்ணார்பண்ணை ஐயனார்கோவிலடி விசுவாசப் பிள்ளையார் கோவில் தேர்த்திருப்பணி நிதிக்காக

**23-4-69 புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு**

**யாழ்ப்பாண நகர மண்டபத்தில்**

**செல்வி வசந்தகுமாரி முத்துக்குமாரு**

அவர்களின்

**பரதநாட்டிய நிகழ்ச்சி**

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த இந்நிகழ்ச்சி யாழ்ப்பாண நகரமண்டபத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஐயனார்கோவிலடி சனசமூக நிலையம்



இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ... 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


...பிள்ளையார் கோவில்கொடியேற்றித் திருவிழா நடந்தது. அந்த விழாவுக்குப் போகமுடியவில்லையே என்று மனம் நொந்து நித்திரையானார். அவரது சொப்பனத்திலே விநாயகர் தோன்றி "நீ கவலைப்படதே' உனது வீட்டின் கிழக்குப் பக்கமாக ஒரு கூப்பிடு தூரத்தில் திருக்கொன்றை நிற்கும். அதன் கீழ் விளக்கு எரியும். அந்த இடத்தில் கோவில் கட்டி என்னை வணங்கு. யான் அதில் வந்து அமர்வேன்" என்றார். அம்மையார் அதிகாலையில் துயிலுணர்ந்து சென்று கண்டு மகிழ்ந்து கூத்தாடி கோவில் கட்டிக் கும்...

...மடம், ...னதான முதலி மடம், இனுங்காத்த முதலி மடம் கணபதி உடையார் மடம் என பல தமிழ் வளர்க்கும் நிலையங்கள் இருந்தன.

அவற்றின் பக்கத்தே அம்பாள் - சிவன் - விக்கினேஸ்வரர் - முருகன் கோவில்களும் அமைக்கப்பட்டன. சமய எதிர்ப்பு இருந்தமையினால், மக்கள் ஒற்றுமையாக தமது சமயத்தை முழுமூச்சுடன் பேணலாயினர். பூசை தவறாது நடந்துவந்தது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பன பராயணஞ் செய்யப்பட்டன வயதுக் கட்டுப்பாடில்லாத கல்வி நிலை...

...அவர் வாழ்வாங்கு வாழுஞ் சமயம் ஆயிரத்துத்தொழாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டு பண்ணைப்படகுவிபத்தில் அவருடைய தர்ம பத்தினியாரும் அருமந்த மகளும் மகனும் தெய்வீகமடைய பொறளையார் பற்றற்ற பரமஞானியானார்.

பொறளையாரின் அடுத்த வேலையாக கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம் சாஸ்திர முறைப்படி புதுப்பிக்கப்பட்டது நாற்பத்திரண்டுதொடக்கம் நாற்பத்திநான்காம் ஆண்டுவரை அந்தத் திருப்பணிவேலைகள் நடைபெற்றன. தமிழ்நாட்டில் மிக்க ...டில் உள்ள சைவத் தமிழர்களில் பெரும்பாலார்கட்டுகொண்டு தமிழ்விறுல அருட்பொலிவும் பெற்றனர். நாடுமுழுவதும் அரும்மயம் நிறைந்து ததும்பியது. கலட்டி வரசித்தி விநாயகர் திருவருட்டிறங்களில் இதுவும் ஒன்ருகப் போற்றப்பட்டது.

### மூன்ருவது கும்பாபிஷேகம்

இன்று மூன்ருவது கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

...விருந்தில், மாப்பிள்ளை ஆண்களுடனும், மணப்பெண் மற்றப் பெண்களுடனும் சேர்ந்து தமிழ்ப் பண்பாட்டின்படியே சாப்பிட்டனர். தமிழ் நாகரீகத்தை மேலைநாட்டவர் பரிகசித்த காலம் ஒன்றுண்டு. ஆனால் இப்போதோ, மேலைநாட்டினர் தமிழ் முறைகளின் மேன்மைகளை மெதுவாக உணர்ந்து அதைப் பின்பற்றவும் முன்வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால் இதேசமயத்தில் தமிழ் வாலிபர்கள், மேலைநாட்டு நாகரீகத்தைப் பின்...

...அதை இப்பொழுதே செய்து கொண்டிருக்கிறேன்" என்று அவர் சொல்லி தொடர்ந்து ஆகாசத்தைப் பார்த்தாராம். கற்றதனால ஆய பயன் என்ன?

0 0 0

பண்ணில ஓசை பழத்தி
லின் இன் சுவை,
பெண்ணொடு ணென்று
பேசற்கரியவன்,
வண்ண மிலலி வடிவு
வேருயவன்,
கண்ணிலுண் மணி கச்சி
யேகம்பனே.

-அப்பர் அடிகள்.

# பொருளாதார ஏற்றத்தாழ்வே தீண்டாமை நிலைப்பதற்குக்காரணம்

**தீண்டாமை கொடுமை நிலவுவதற்கு ஜாதிவித்தியாசமல்ல, பொருளாதார ஏற்றத்தாழ்வே காரணம் என்கிறார் இந்தக் கட்டுரை ஆசிரியர். ஜாதி இந்துக்களிடையே கூட பொருளாதாரக்கஷ்டமுள்ளவர்கள் தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.**

**இந்தியாவில் தீண்டாமைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட பெருமாள் கமிட்டியின் ஓர் உறுப்பினரான இக்கட்டுரை ஆசிரியரின் கருத்துக்கள் நம்நாட்டுக்கும் பொருத்தமாகவிருப்பதால் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.**

தீண்டாமை மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வினால் உண்டானதன்றி சாதிவேறுபாட்டால் உண்டானதொன்றல்ல. உதாரணமாக இந்து சமயத்தவர்களில் உயர் சாதியினரிடையேகூட ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இவர்களில் பொருளாதாரம் குறைந்த கல்வியறிவற்றவர்கள் அதே இனதிதவர்களான கல்வியிற் சிறந்து சகல துறைகளிலும் உயர் பதவிகளில் இருப்பவர்களைபல் தாழ்வாக மதிக்கப்படுகிறார்கள். ஹரிஜனரை நோக்கும்போது இதே நிலைமை தெளிவாகிறது. இவர்கள் மத்தியிலும் கல்வியறிவு பெற்று உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களை எவ்விடத்திலும் எல்லோரும் மதிக்கிறார்களேயன்றி இவர்கள் தீண்டப்படக் கூடாதவர்கள் எனக் கருதி ஒதுக்கப்படுவதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக காலஞ்சென்ற டாக்டர் அம்பேட்காரையும் திரு. சஞ்ஜீவையா, திரு. ஜகஜீவன்ராம் ஆகியோரைக் கூறலாம். இவர்கள் மூவரும் ஹரிஜனர்களே எனினும் தீண்டாமை என்பதினால் பாதிக்கப்படவில்லை. நான் ஒரு ஹரிஜனனாக இருந்தும்கூட தீண்டாமை என்பதனால் தாக்கப்படவில்லை. முன்பு நாட்டில்தீண்டாமை தலைதூக்கிய தருணத்தில் மகாத்மாகாந்தி கேரளத்தைச் சேர்ந்த நாராயணகுரு, வேறும் பல தலைவர்கள் ஆகியோருடன் சில ஸ்தாபனங்களும் ஒத்துழைத்து அதை முறியடிக்க முயற்சி செய்து பொதுமக்கள் மனதில் சமூகத்துக்குத் தீங்கு விழைவிக்கும் தீண்டாமையென்னும் தீய பழக்கத்தை அறவே ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோன்றச் செய்தனர். இன்று தீண்டாமை சட்டத்தின்மூலம் ஒழிக்கப்பட்டுள்ளது.

இடைவிடாது சிலர் தீண்டாமைபற்றி அலட்டிக்கொண்டேயிருப்பதனால், ஹரிஜனங்களின் மனம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இன்று சிலர் பொருளீட்டுவதற்குத் தீண்டாமை ஒரு கருவியாக அமைந்துள்ளது. சில ஸ்தாபனங்களினதும் குறிப்பிட்ட சிலரினதும் வாழ்க்கைக்கு உதவ இந்தியாவில் சாதிப்பாகுபாடு அத்தியாவசியமாகிறது. இவர்களோ தீண்டாமை என்கின்ற தீய பழக்கத்துக்கு அடிப்படைக் காரணமாவர். இத்தகையவர்கள் உயர்ந்த சாதி இந்துக்களிடையே மட்டுமன்றி வேறு குறிப்பிட்ட சாதியினரிடையேயும் உள்ளனர். தீண்டாமையை ஒழித்து அதனால் தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதற்குஅரசாங்கத்திடமிருந்து இவர்கள் உதவி பெறுகிறார்கள். இந்த ஹரிஜனத் தலைவர்கள் அரசாங்கத்திடம் பெற்ற உதவியை வேறு வழிகளில் செலவு செய்துவிட்டு ஹரிஜனங்களை மேலும் பிற்போக்கானவர்களாக்கி விடுகிறார்கள். ஹரிஜனங்கள் முன்னேற முற்படாது தாங்கள் ஹரிஜனர்களாகவே இருக்க விரும்பினால அவர்களின் முன்னேற்றம்வெறும் கனவாகவே போய்விடும்.

வெளிப்படையாகக் கூறப்போனால் உலகில் வறியவர்கள், செல்வந்தர் என்று இரு வகுப்பினரே காணப்படுகின்றனர். ஆனால் இந்தியாவில் இவ்விரு சாராருக்குமிடையே பெரிய தோர் இடைவெளி காணப்படுகிறது. இவர்களிடையேயுள்ள இந்த ஏற்றத்தாழ்வைக் குறைப்பது மிக மிக அவசியம். தீண்டாமையை ஒழிப்பதற்கு இதுவே சிறந்த பரிகாரமாகும். அண்மையில் நாட்டின் பல பகுதிகளையும் நான் சென்று பார்த்தபொழுது எந்தவொரு இடத்திலாவது சாதியடிப்படையாகத் தீண்டாமை தோன்றியுள்ளதைக் காணவில்லை. இதற்கு மாருகச் சகல வசதிகளோடும் செல்வந்தர்களாக வாழ்பவர்கள், வறுமையால் பிற்போக்கான நிலையையடைந்து கல்வியறிவற்றவர்கள் ஆகிய இரு சாராரையும் நான் காணக்கூடியதாகவிருந்தது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் இதற்காக அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைப் பட்சபாதகமற்ற சிலர் நாட்டின் தீண்டாமை நிலைபெற அரசாங்கமும் உதவிசெய்யும் ஒரு கட்சியாகவுள்ளதோ எனச் சந்தேகிப்பர். இவ்வாறு குறிப்பிட்ட சாதியினருக்கு சலுகைகள் வழங்கப்படுவதினால் அவர்களுக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுவிடுகிறது. இந்தச் சலுகைகள் இவர்களுக்குத் தாழ்வுமனப்பான்மையை வளர்க்கவும் சீரான வாழ்க்கைக்கு வேண்டிய நேர்மையான கடும் உழைப்பிலிருந்து தப்பிக்கொள்ளவும் கஷ்டப்படாமலிருக்கவும் உதவிசெய்கின்றன. இவ்வாறு குறிப்பிட்ட சாதியினருக்கு மாத்திரம் அரசாங்கம் உதவிசெய்யாது எல்லா மக்களுக்கும் அவரவர்கள் தகுதிக்கேற்ப உதவிசெய்தால் ஹரிஜனர்கள் தாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற எண்ணத்தைவிட்டுவிடுவர். நாட்டிலுள்ள சகல மக்களிடையேயும் ஒரு சமசீரான பொருளாதாரத்தை ஏற்படுத்த அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென நான் கருதுகிறேன்.

நான் குஜராத்துக்குச் சென்றிருந்தபொழுது அங்கு பெருமாள் விசாரணைக்குழுவின் தலைவரும் அச்சபையின் அங்கத்தவர்களும் அங்குள்ள பிராமணர்களின் விருந்தோம்பலை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இச்சபை தனதறிக்கையில் தீண்டாமை இந்தியாவின் பலபாகங்களிலும் காணப்படுகிறது. குறிப்பாக உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய இடங்களில் அதிகமாகப் பரவியுள்ளது எனத் தெரிவித்திருந்தது. இது எதைக் குறிக்கிறது? குஜராத்தில் இச்சபை அங்கத்தவர்கள் நடத்தப்படும் முறையை நோக்கும் போது இது உண்மையான கூற்றல்ல என்பது வெளிப்படையாகப் புலனாகிறது. சில பொது இடங்களில் தீண்டாமையிருக்கலாம். ஆனால் இந்தத் திட்டமிடப்படாத நடைமுறையை ஒழிக்க வேண்டும். குறிப்பிட்ட சாதியினரிடம் இது நிலவுவதற்குக் காரணம். பொருளாதாரச் சீர்கேடும் கல்வியறிவற்ற பிற்போக்கான நிலையும்தான் என்கின்ற எனது கருத்தைத் தெளிவாக்குகிறது.

ஹரிஜனர்களுக்கென அபிவிருத்தித்திட்டங்களை அமைக்கக்கூடாது. போதிய பொருளாதார வசதியற்ற சகல மக்களுக்கும் பொதுவானதாக அவை அமைய வேண்டும். ஹரிஜனருக்குத்தான் இந்த அபிவிருத்தித் திட்டங்களின் பயன் உரியது என ஒருவரும் கருதக்கூடாது. ஒவ்வொரு இந்தியருக்கும் இத்திட்டங்களின் பலாபலன்களில் உரிமையுண்டு. அதே நேரத்தில் ஹரிஜனனுகவிருப்பது துரதிர்ஷ்டமானது எனவும் தாழ்வானதாகவும் ஒருவரும் கருதக்கூடாது. ஓர் உயர்ந்த சாதி இந்து குடும்பத்தில் பிறந்த பிள்ளை வறியவனுகவிருந்தால் அவனின் வாழ்க்கைவளம்பெற ஒரு ஹரிஜன பிள்ளையின் வாழ்க்கை வளம்பெறத் தேவையான அத்தனை உதவிகளும் தேவைப்படுகிறது.

இதே வேளையில் பணவசதியுள்ள ஒரு ஹரிஜன குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு இந்தச் சலுகைகள் உள்ளதால் அப்பிள்ளை இவ்வுதவிகளை எதிர்பார்க்க வேண்டியதில்லையென்பதையும் நான் கூறவிரும்புகிறேன். அவனது வளர்ச்சிக்குச் சாதி முட்டுக்கட்டையாகவிருக்கவில்லை. எனவே இதிலிருந்து தீண்டாமைக்குப் பரிகாரம் தேடவேண்டுமெனில் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தவேண்டும்.

சாதி என்ற ஒன்றே இந்த விஞ்ஞான காலத்திலில்லை இல்லாத ஒன்று குறித்துச் சண்டையிடுவதில் ஒருவித பயனுமில்லை. தீண்டாமை சட்டத்தின்மூலம் நீக்கப்பட்டுள்ளது. எனமே ஹரிஜனர்கள் தைரியத்தோடு சுயமுயற்சியோடும் முன்னேறி இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சென்று இந்திய பிரஜைகளாக வாழலாம். இதனால் இவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதற்குத் தங்கள் தலைவர்கள் மீது தங்கியிருக்கத் தேவையில்லை. தைரியமாகச் செயலில் இறங்குபவர்களுக்கு நான் ஆதரவளித்து அவர்களோடு நிற்பேன். ஆனால் துக்கப்படுகிறவர்களோடும் இரந்து வாழ்பவர்களோடும் ஒத்துழைக்கமாட்டேன். இந்தக்காலம் செயலில் இறங்குவதற்குரிய காலமேயன்றி அழுவதற்குரிய காலமல்ல.

— ஆர். அச்சுதன் —

## மரண அறிவித்தல்

### சி. கனகரத்தினம்

கந்தர் மடத்தைச் சேர்ந்த **சின்னத்தம்பி கனகரத்தினம்** சிவபதமடைந்து விட்டார். இவர் திருமதி பூமணியின் கணவரும், ஜெயநாதன் (லொறி உரிமையாளர்) அவர்களின் தந்தையும், திருமதி சாரதாதேவி ஜெயநாதனின் மாமனுருமாவர். அன்னாரின் பூதவுடல் தகனத்திற்காக அம்மன் வீதி, 25 A இலக்க அவரது இல்லத்திலிருந்து இன்று காலை 10 மணிக்கு கோம்பயன் மணல மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org